பக்கங்கள்:17 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 01 ஞாயிற்றுக்கிழமை 15.05.2022 கதிர் 191

### இது ரகசியம் அல்ல!

விடுதலைப் புலிகள் மீள ஒருங்கிணைந்து விட்டார்கள், முள்ளிவாய்க்கால் நினை வேந்தல் நாளில் இலங்கையில் தாக்குதல் நடத்தப் போகின்றார்கள் என இந்திய புலனாய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்து உள்ளனர் என்று 'த இந்து' நாளிதழ் ☞2

# புலிகள் மீள ஒருங்கிணைந்து மே 18 இல் தாக்குவார்களாம்!

## இந்தியப் புலனாய்வு அமைப்புக்கள் எச்சரிக்கை என 'த ஹிந்து' நாளிதழ் வெளியிட்ட செய்தியால் பரபரப்பு

கொழும்பு,மே 15

இலங்கை தற்போது பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியில் சிக்குண்டிருக்கும் நிலையில் தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீண்டும் ஒருங்கிணைந்து இலங்கை மீது தாக்குதல்களை நடாத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது என இந்தியப் புலனாய்வு அமைப்புக்கள் எச்சரித்துள்ளன என இந்தியாவிலிருந்து வெளியாகும் 'த ஹிந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. ☞2

## தமிழர் அபிலாஷைகளை வென்றெடுக்க இந்தச் சூழலைப் பயன்படுத்துங்கள்!

### தமிழர் தரப்புகளுக்கு டக்ளஸ் அழைப்பு



உருவாகியிருக்கின்ற அரசியல் சூழலைப் பயன்படுத்தி பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மக்களை மீட்பது மாத்திரமன்றி, தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் மற்றும் எதிர்பார்ப்புக்களைவென்றெடுப்பதற்கான சந்தர்ப்பமாகவும் தமிழ் தரப்புக்கள் இச்சூழலைப் பயன்படுத்த வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவின் கோரிக்கைய ஏற்றுக் கொண்டு மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வைக் ☞2

## எம்.பிக்களின் வீடுகளுக்கு இராணுவத்தின் பாதுகாப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மே 15

நாடாளுமன்ற உறுப்பினர் அனைவரது இல்லங்களிற்கும் நேற்று முதல் இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையின் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களது இல்லங்களிற்கு முன்பாகவும் நேற்று மாலை முதல் இராணுவம் பாதுகாப்பு பணியில் இறக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் அதனை விரும்பாதபோதும் வீடுகளிற்கு அண்மையில் இராணுவத்தினர் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

வடக்கின் கூட்டமைப்பு, த.தே.ம.முன்னணி, த.ம.கூட்டணி நாடாளுமன்ற ☞17

## ரணிலுக்குப் பூரண ஆதரவு மொட்டுக் கட்சி தீர்மானம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆக்கியோரின் கீழ் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்துக்குப் பூரண ஆதரவை வழங்குவதற்கு மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளது.

அத்துடன், ☞17

## முள்ளிவாய்க்காலை நோக்கி மக்கள் அணி வடக்கு, கிழக்கில் இருந்து தனித்தனியாக

(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,மே15

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு இம்முறை வடக்கு மற்றும் கிழக்கில் இருந்து பேரணி ஒன்றை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இன விடுதலையை தேடி முள்ளிவாய்க்காலை நோக்கி என்ற கருப்பொருளில் ☞2




## துணுக்காயில் குளவி கொட்டி வயோதிபர் சாவு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மே.15


துணுக்காய் பகுதியில் மரத்தில் இருந்த குளவிக் கூடு கீழே வீழ்ந்ததால் கலைந்த ☞15

## மரத்திலிருந்து தவறி வீழ்ந்தவர் உயிரிழ்ப்பு

ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மே.15

மானிப்பாயில் மாமரத்தில் ஏறி கிளையை வெட்டிய குடும்பஸ்தர் தவறி ☞15



## நீதியரசர் விக்கி அமச்சராகிறார்?

நிபந்தனைகளுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அமைச்சரவையில் பங்கேற்கலாம் என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி தெரிவித்துள்ளது.

முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சரும் ☞17

## அமெரிக்கத் தூதுவர் அநுரவுடன் சந்திப்பு!

### அரசியல் நிலைமை, பொருளாதார நெருக்கடி குறித்து முக்கிய பேச்சு



இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி ஜியூன் சங், மக்கள் விடுதலை முன்னணி யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பியைச் சந்தித்து முக்கிய பேச்சு நடத்தினார்.

நேற்றுப் பிற்பகல் மக்கள் விடுதலை ☞15

## ரோஹினி கவிரத்ன எதிர் அஜித் ராஜபக்ஷ பிரதி சபாநாயகர் பதவிக்குப் பலப்பரீட்சை

நாடாளுமன்றம் நாளை மருதினம் கூடும்போது, முதலாவது பணியாக இடம்பெறு பிரதி சபாநாயகரை தேர்வின் போது தமது கட்சியின் மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்னவை, பிரதி சபாநாயகர் வேட்பாளராக களமிறக்குவதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

அதேபோல பிரதி சபாநாயகர் பதவிக்கு தமது கட்சியின் சார்பில் அம்பாந்தோட்டை ☞2





## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வெளியிட்ட செய்திதான் தென்னிலங்கையின் பிந்திய பரபரப்பு விவகாரம்.

வரும்புதன்கிழமைமுள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நடக்கவிருக்கையில் அதைத் தடுப்பதற்கான சதித்திட்டமே இந்தச் செய்தி என்று நினைவேந்தல் ஏற்பாட்டாளர்கள் தரப்பில் புலம்பல் கேட்கின்றது.

ஆனால் கொழும்பில் ஒரு சிங்கள ஊடகவியலாளர் சுட்டிக்காட்டிய விடயம் சற்று பதற்றத்தைத் தருகின்றது. அவர் சொன்ன வியங்கள் இவைதான்:-

இப்படித்தான் ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதல்கள் குறித்து முற்கூட்டியே இதே இந்தியப் புலனாய்வுத் தரப்புக்கள் தகவல் தந்தன. நாங்கள் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. விளைவுகளைச் சந்தித்தோம்.

அந்தத் தாக்குதல்களை நடத்தியவர் யார், அவை எப்படி நடந்தன என்பவையெல்லாம் வேறு விடயங்கள். ஆனால் அந்தத் தாக்குதல் ஏன் நடத்தப்பட்டது, அதற்கான பின்னணிகள், சூத்திரதாரிகள் யார், அவர்களின் நோக்கம் யாது, தாக்குதலினால் அவர்களுக்குக் கிட்டிய லாபம் என்ன என்பவை தொடர்பில் இப்போது கூறப்படும் – அல்லது கிளப்பப்படும் – சந்தேகங்கள் கவனத்துக்கு உரியவையாகின்றன. அந்தத் தாக்குதல்கள் குறித்து முழுமையாகப் புலனாய்வு செய்யப்படாமல், சூத்திரதாரிகள் சட்டத்தின் முன் கொண்டு வரப்படாமல் வைக்கப்படுவதற்கான காரணம் யாது என்று கேட்டு கொழும்புப் பேராயர் கர்த்தினால் மல்கம் ரஞ்சித்தும் ஏனையோரும் இப்போது ஐ.நா. மனித உரிமைகள் மன்றம், ரோமாபுரியில் புனித பாப்பரசர் ஆகிய தரப் புகள் வரைச் சென்று முறையிடுகிறார்கள. அந்த விடயங்களில் பொதிந்து கிடக்கும் தகவல்கள் என்ன? யாரை அதிகாரத்துக்குக் கொண்டு வருவதற்காக இந்தத் தொடர் குண்டுத் தாக்குதல்கள் ஏவி விடப்பட்டன என்பதுதானே அவர்கள் தரப்பின் பிரதான கேள்வி!

அதே மாதிரியான தாக்குதல் பற்றி எச்சரிக்கை, அதேபோன்ற தரப்பினரிடமிருந்து இப்போது வருகின்றது.

அது – அந்தத் தாக்குதல் யாரையோ அதிகாரத்துக்கு கொண்டு வரவே நடத்தப்பட்டது என்றால், இது – இனி நடக்கக்கூடிய இந்தத் தாக்குதல் யாரையோ அதிகாரத்தில் தக்க வைப்பதற்காக, தக்க வைப்பதை உறுதிப்படுத்துவதற்காக, திட்டமிடப்படுவதாக ஏன் அமையக் கூடாது?

இந்தப் புலனாய்வுத் தகவல்கள்படி தாக்குதல் ஒன்று மோசமாக இடம்பெறுமானால் மீண்டும் இனக்கலவரங்கள் இங்கு வெடிக்கலாம். நாட்டைப் பாதுகாப்பதற்கு மீண்டும் பழைய இராணுவ வர்க்கமே அவசியம், அவர்களைக் கலைக்க முடியாது என்ற வாதங்கள் பேரினவாத எழுச்சியோடு உருக்கொள்ளும்.

நாட்டின் அரசியல் செல்நெறி பழையபடி இப்போதைய ஆட்சியாளர்கள் எதிர்பார்க்கும் – விரும்பும் – தடத்துக்கு ஏறிவிடும்.

வரப்போகின்ற அல்லது வந்துவிட்ட புலிகளை எதிர்கொள்வதற்கு கோட்டா மட்டுமே பொருத்தமானவர் என்றாகும்.

'கோட்டா கோ ஹோம்' போராட்டங்கள் சிதறடிக்கப்படும். 'கோட்டா ஸ்டே இன் ஒபீஸ்' என்ற கோஷங்கள் பீறிட்டுக் கிளம்பும்.

தென்னிலங்கையில் பேயெனக் கிளர்ந்த எதிர்ப்பை, மீளவும் பயங்கரவாதம் என்ற பிசாசு வந்துவிட்டதாகக் காட்டி அடக்க முன்னெடுக்கப்படும் படு கேவலமான – கீழ்த்தரமான – அரசியல் தந்திரோபாயம் இது.

பதவிக் கதிரைக்கு வருவதற்காகவே 'பயங்கரவாதங்களை' புரிந்தவர்கள், தற்போது தாம் அனுபவிக்கும் அதிகாரங்களை தக்க வைத்துக் கொள்வதற்கு எந்த அளவுக்குப் போவார்கள்? புலிகளை மட்டுமல்ல, பிரபாகரனையும் கூட அவர்கள் உயிருடன் கொண்டு வருவார்கள்.– என்றார் அவர்.

பேரினவாதத்தைக் கிளப்பி அதன் மூலம் ஆட்சியதிகாரத்துக்கு வந்தவர்களுக்கு, அந்த ஆட்சி அதிகாரத்தைத் தக்க வைப்பதற்கு மீண்டும் அதே பேரினவாத எழுச்சி தேவைப்படுகின்றது. அதற்கான ஊக்கியாக புலிகளின் மீள் உருவாக்கம், அவர்களின் தாக்குதல்கள் என்பவை எல்லாம் உதவும். அதனால் அவை எல்லாம் நடத்திகாட்டப்படும் என்று நம்பலாம்.

ஆனாலும் இப்போதைய சிக்கல் சமயத்தில் அரசுக்கு வேறு ஒரு பிரச்சினை உண்டு. ஏற்கனவே கடந்த 6ஆம் திகதி பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகால நிலைமை 10 நாள்களுக்குள் அது பற்றிய விடயம் நாடாளுமன்றத்தில் அறிக்கையிட தவறியமையால் நாளை இரவோடு அந்த அவசரகால நிலைமை காலாவதியாகிவிடும். அதற்குப் பின்னர் செவ்வாய், புதன்கிழமைகளில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாள்கள் இருக்கின்றன. அவற்றைத் தமது இரும்புக் கரம் கொண்டு அடக்க விழையும் ஆட்சியாளர்களுக்கு, அவசரகால நிலைமை காலவதியாவது ஒரு கையை இழந்தமை போன்ற நிலைமையே தரும்.

அவசரகால நிலைமை இல்லாமல் முள்ளிவாய்க்கால் நெருக்கடியைச் சமாளிப்பது என்பது அரசுக்கு மிகுந்த சவாலாகவே இருக்கும்.

நாட்டில் கடந்த சில வாரங்களாக நீடிக்கும் அரசியல், பொருளாதார நெருக்கடிகள் மற்றும் அதனால் ஏற்பட்ட சர்ச்சைகளின் பின்னணியில், நாடாளுமன்றம் நாளை மறுதினம் காலை கூடுகின்றது. மொட்டு கட்சி எம்.பிக்கள் பலரும் தத் தமது ஊர்களில் தத்தமக்கிருக்கும் நெருக்கடிகள் காரணமாக நாளை மறுதினம் நடக்கும் நாடாளுமன்ற அமர்வை தவிர்க்க விரும்புகின்றனர் என்று தெரிகின்றது. ஆயினும் அன்றைய தினம் பிரதி சபாநாயகர் பதவி தொடர்பில் ஆளுங்கட்சியும் எதிரணியும் நேரடி மோதலுக்கு தயாராகி உள்ளன என்று கூறப்படுகின்றது. இந்தப் பிரதிச் சபாநாயகர் தேர்வில் வெற்றி பெறுவதற்காக தமது தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் நாளை மறுதினம் நடக்கும் நாடாளுமன்ற அமர்வுக்குச் கூட்டி வருவதற்கு எல்லாக் கட்சிகளும் தீவிரம் காட்டுகின்றன. அரசுத் தரப்பிலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வேட்பாளரை ஆதரிப்பதற்காக, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட ராஜபக்ஷக்கள் அனைவரும் செவ்வாய் கூட்டத்திற்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது

அன்றைய தினம் நாட்டில் அவசர கால நிலை இருக்காது. ஆனால் சபைக்கு வரும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் போதிய பாதுகாப்பு வழங்க வேண்டிய கடப்பாடு பாதுகாப்பு தரப்பினருக்கும் உண்டு.

அவசரகால நிலைமை காலாவதியான பின்புலத்தில் நாளை மறுதினம் நடக்கும் ரணில் அரசின் கன்னி நாடாளுமன்ற அமர்வின் போது, பிரதி சபாநாயகர் தெரிவு உள்ளிட்ட முக்கிய விடயங்கள் இடம்பெற விருக்கின்றன. அவசரகால நிலைமை இல்லாத நிலையில் பொலிஸாரும் முப்படையினரும் எப்படி இவற்றைக் கையாளப் போகின்றார்கள் என்பதும் முக்கிய கேள்வியாக இருக்கும்.

– மின்னல் –

## புலிகள் மீள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தீவிரமான வன்முறைப் போராட்டங்களால் நாட்டில் இரண்டு முறை அவசர கால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் பன்னாட்டுத் தொடர்புகளைக் கொண்ட புலம்பெயர் தமிழர்களின் சில பிரிவினர் போராட்டக்காரர்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே நடந்து வரும் மோதல்களில் தங்கள் இருப்பை உணர்த்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என்று பொலிஸ் வட்டாரங்கள் வெள்ளிக்கிழமை தெரிவித்தன.

தமிழ் இனப்படுகொலை நினைவு தினமாக சில குழுக்களால் அனுசரிக்கப்படும் முள்ளிவாய்க்கால் நினைவு தினமான மே 18 ஆம் திகதி இலங்கை மீது தாக்குதல்களை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும், 2009இல் கடுமையான சண்டைக்குப் பின்னர் இன மோதல் முடிவுக்கு வந்தபோது தமது தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், செய்தி வாசிப்பாளர் இசைப்பிரியா மற்றும் பலர் கொல்லப்பட்டமைக்கு பழிவாங்குவதற்காக முன்னாள் புலிகள் சதித் திட்டம் தீட்டியுள்ளனர்.

இலங்கையில் தங்கள் மோசமான திட்டங்களைத் திட்டமிட்டுச் செயற்படுத்துவதற்காக சில முன்னாள் புலிகள் தமிழ் நாட்டிற்குள் நுழைந்துள்ளனர். கடலோர மாவட்டங்களில் இருந்து வரவழைக்கப்பட்ட மாநில புலனாய்வு மற்றும் உள்ளூர் பொலிஸ் சிறப்புக் குழுக்கள் மாநிலத்தில் 1000 கி.மீ கடற்கரையோரத்தில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளன. தமிழக பொலிஸின் கடலோரப் பாதுகாப்புக் குழு கடல் எல்லையில் ரோந்துப் பணியை அதிகப்படுத்தியுள்ளது.

கடலுக்குச் செல்லும் மீனவர்களுக்கு ஆபத்துக் காரணிகள் தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதுடன் ஆழ்கடலிலும் சர்வதேசக் கடல் எல்லைக் கோட்டிலும் சந்தேகத்திற்கிடமான நடவடிக்கை அல்லது நபர்களைக் கண்காணிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டது. இலங்கைப் பிரஜைகள் இந்தியாவுக்குள் ஊடுருவ வதைத்தடுக்குமாறு கரையோரப் பாதுகாப்பு நிறுவனங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் கடலுக்குச் செல்லும் அனைத்து வீதிகளிலும் வாகனச் சோதனையைத் தீவிரப்படுத்துவதற்காக அனைத்துக் கடலோர மாவட்டங்களின் பொலிஸ் அத்தியட்சகர்களும் சோதனைச் சாவடிகளைப் பலப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அனுதாபிகள் எனச் சந்தேகிக்கப்படும் அல்லது அதன் முன்னாள் போராளிகளின் செயற்பாடுகளை கடந்த வருடங்களாக தமிழ்நாடு அவதானித்து வருகின்றது. கடந்த ஆண்டு இலங்கையில் புலிகள் அமைப்பைப் புத்துயிரப்படுத்துவதற்கு நிதி திரட்டியமை மற்றும் சர்வதேச தொடர்புகளுடன் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் புலிகளின் முன்னாள் புலனாய்வுப் பிரிவின் செயற்பாட்டாளரான சபேசன் என்ற சற்குணம் என்பவரை தேசிய புலனாய்வு நிறுவனம் கைது செய்தது.

செயற்பாடற்ற வங்கிக் கணக்கில் கிடக்கும் பெரும் தொகைப் பணத்தை மோசடியான முறையில் எடுப்பதற்கு மும்பை சென்ற பெண் ஒருவர் சென்னை விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார். பின்னர் அதன் வழக்கு விசாரணையின் போது இலங்கையில் விடுதலைப் புலிகளின் மறுமலர்ச்சிக்காக நிதி திரட்டும் பணிக்காகவே அவர் நியமிக்கப்பட்டிருந்தார் என தெரிய வந்தது.

இவ்வாறு உளவுத்துறை உள்ளீடுகளை மேற்கோள்காட்டி 'த ஹிந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## முள்ளிவாய்க்காலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இடம்பெறும் இப்பேரணிகள் கிழக்கு மாகாணத்தில் இருந்து இன்றும் வடக்கு மாகாணத்தில் இருந்து நாளையும் ஆரம்பிக்கப்பட்டு மே18 ஆம் திகதி இரண்டு பேரணிகளும் முள்ளிவாய்க்காலைச் சென்றடைந்து நினைவேந்தலில் பங்கேற்கவுள்ளது.

யாழ் ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் வேலன் சுவாமிகள் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரம் நடைபெற்று கொண்டிருக்கும் வேளையில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம் மற்றும் பொது அமைப்புக்கள், சிவில் சமூகங்கள் போன்ற அமைப்புக்கள் இணைந்து பேரணியை மேற்கொள்ளவுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் இன்று ஆரம்பிக்கும் பேரணி பொத்துவிலில் ஆரம்பித்து திருக்கோவில், அக்கரைப்பற்று, கல்முனை, களுவாஞ்சிகுடி ஊடாக திருகோணமலை நோக்கி அங்கிருந்து முல்லைத்தீவின் முள்ளிவாய்க்காலை சென்றடையும்.

வடக்கு மாகாணத்தில் நாளை ஆரம்பிக்கும் பேரணி வல்வெட்டித்துறையில் ஆரம்பித்து யாழ்ப்பாணம், தென்மராட்சி, பரந்தன், பூநகரி, வெள்ளாங்குளம், மாங்குளம் ஊடாக முள்ளிவாய்க்காலை அடையும். பிர தான வீதிகளில் நடந்தும் ஏனைய பகுதிகளில் வாகனங்கள் ஊடாகவும் இந்த பேரணி செல்லவுள்ளது.

அரசியல் தரப்புகள், பல்கலைக்கழக மாணவர்கள், விவசாயிகள், இளைஞர்கள், பெண்கள் மாணவர்கள், மீனவ சங்கங்கள், போக்குவரத்து அமைப்புகள் அனைவரையும் பங்கேற்க அழைக்கின்றோம்.– என்றார் அவர்.

## தமிழர் அபிலாஷை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
காணும் நோக்குடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுள்ளார்.

இந்த அரசியல் சூழலைப் பயன்படுத்தி, தமிழ் மக்களின் அரசியல் தீர்விற்கான ஆரம்பமாக உருவாக்கப்பட்டுள்ள இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

அதேபோன்று, அரசியல் கைதிகள் விடுதலை – காணாமல் போனோர் விவகாரத்திற்கான தீர்வு – பல்வேறு காரணங்களினால் பயன்படுத்தப்பட முடியாமல் இருக்கும் எமது மக்களின் காணிகளை விடுவித்தல் – இளைஞர், யுவதிகளுக்கான வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல் போன்ற மக்களின் எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்றுவதற்கான சந்தர்ப்பமாக இந்தச் சூழலைப் பயன்படுத்த தமிழ் தலைமைகள் முன்வரவேண்டும்.

மாறாக, சுயலாப அரசியல் நலன்களை மனதில் கொண்டு, வழமை போன்று தமிழ் தலைமைகள் எதிர்ப்பு அரசியலை மேற்கொள்ளுமாயின், அது எமது மக்களுக்கு இழைக்கின்ற இன்னுமொரு வரலாற்று துரோகமாகவும் தவறவிடப்பட்ட இன்னுமொரு சந்தர்ப்பமாகவும் அமையும் – என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ரோஹினி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் ராஜபக்ஷவின் பெயரை முன்மொழிவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உத்தேசித்துள்ளது.

பிரதி சபாநாயகராக இரண்டாவது முறையாகவும் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, மறுநாளே அப்பதவியை இராஜினாமா செய்தார்.

இதனால் நாடாளுமன்றம் எதிர்வரும் 17 ஆம் திகதிகூடும்போது, முதலாவது பணியாக பிரதி சபாநாயகரை தேர்வு செய்ய வேண்டும்.

கடந்தமுறைபோல இம்முறையும் இருவரின் பெயர்கள் முன்மொழியப்படும் என எதிர்பார்க்கப்படுவதால் இரகசிய வாக்கெடுப்புமூலமே தேர்வு நடக்கும்.

இலங்கையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியைக் கூட பெண்ணொருவர் வகித்துள்ளார் (சந்திரிக்கா). அதேபோல உலகின் முதல் பெண் பிரதமரும் இலங்கை மண்ணில் இருந்துதான் தேர்வானார்(ரீமாவோ பண்டாரநாயக்க). எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் பெண் எம்.பி. வகித்துள்ளார். அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சு பதவிகளையும் வகித்துள்ளனர்.

ஆனால் முதலாவது நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்ற 1947 முதல் இற்றைவரை சபாநாயகராகவோ அல்லது பிரதி சபாநாயகராகவோ பெண் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவாகவில்லை. 2018 இல் பிரதி சபாநாயகர் பதவிக்கு வைத்தியர் சுதர்ஷினி பெர்ணான்டோ புள்ளே போட்டியிட்டிருந்தாலும் அவர் வெற்றிபெறவில்லை.

இதற்கு முன்னர் பிரதி சபாநாயகர் பதவிக்கு இம்தியாஸ் பாக்கீர் மாகாரை களமிறக்கிய ஐக்கிய மக்கள் சக்தி இம்முறை, அப்பதவிக்கு பெண் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் பெயரை முன்மொழியவுள்ளது. இதனால் மொட்டு கட்சி பின்வாங்கக்கூடும். அவ்வாறு நடந்தால் ரோஹினி கவிரத்ன ஏகமனதாக தெரிவு செய்யப்படுவார். சுதந்திர இலங்கையில் முதலாவது பெண் பிரதி சபாநாயகர் என்ற பதவிநிலை அந்தஸ்த்தையும் பெறுவார்.

பெண் எம்.பியொருவர் பிரதி சபாநாயகர் பதவிக்கு வரவேண்டும் என்ற விடயத்தை பிரதமரும் அறிவித்துள்ளார்.

# மேதினியின் அற்புதமே!

மேதினியின் அற்புதமே
மேநாட்டின் முத்தாரமே
இன்பமே
என்றிருந்த என்நிலமே
ஈழமே,
புத்தகமே
பொக்கிஷமே
என்னினமே,
பேரின வாதமே
கட்டவிழ்த்து தீயிட்டமே
யுத்தமே
இனி என்றும் துன்பமே
வீடிழந்தமே நாடிழந்தமே
வீதியெங்கும் நடந்தமே
அன்னமே
இன்றி அழுதமே
விதியை நொந்தமே
மாதருடை கழைந்தமே
மாண்பிழந்தமே
மதிகெட்டு அலைந்தமே
தெய்வமே
நீயெங்கு தேடினமே
வெந்தணலில் வெந்தமே
வீரமே வீழ்ந்தமே
பிஞ்சுகளை விதைத்தமே
கனவுகளை கலைத்தமே
சொந்தமே
தொலைத்தமே
மனிதமே
மாண்டமே
எமக்கு என்றுமே
மறவாது இந்தமே!

- கயந்தன் திருநாவுக்கரசு -

மாங்கல்யா
லக்ஷ்மி நாராயணா திருமண சேவை
இல.266, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
077 197 1667. 077 316 4796

மணமகன் விபரம்

பிறந்த திகதி-22.05.1985
மதம்-இந்து
ஜாதி- விஸ்வகுலம்
நட்சத்திரம்-மிருகசீரிடம் (4)
கி.பா-8
செவ்-சூரி1 பல
தகைமை-Industrial Eng
தொழில்-Electronic Eng Dubai
எதிர்பார்ப்பு- பட்டதாரி மணமகள்

பிறந்த திகதி-27.04.1989
மதம்-இந்து
ஜாதி- V ஆண்
நட்சத்திரம்-பூராடம் (4)
கி.பா-21
செவ்-1ல்
தகைமை-ELECONIC ENG
தொழில்-Singapore
எதிர்பார்ப்பு- பட்டதாரி விரிவுரையாளர் கொழும்பில் வேலை SINGAPOUR மணமகள்

.பிறந்த திகதி-15.05.1989
மதம்-இந்து
ஜாதி- V ஆண்
நட்சத்திரம்-உத்தரம்()
கி.பா-45
செவ்-12ல்
தகைமை-B,SC CIVILENG
தொழில்-Singapore WORK
எதிர்பார்ப்பு- DOCTOR ENG வெளிநாடு உள்நாடு மணமகள்

பிறந்த திகதி-07.04.1988
மதம்-இந்து
ஜாதி- V ஆண்
நட்சத்திரம்-கேட்டை
கி.பா-13
செவ்-9ல்
தகைமை-Mechanical Eng
தொழில்-Singapore WORK
எதிர்பார்ப்பு-Dental DOCTOR மணமகள்

பிறந்த திகதி-25.11.1980
மதம்-இந்து
ஜாதி- V ஆண்
நட்சத்திரம்-மிருகசீரிடம்(2)
கி.பா-53
செவ்-2ல்
தகைமை-Electronic
தொழில்-COMPANY உரிமையாளர்
எதிர்பார்ப்பு- படித்த மணமகள் சீதனம் எதிர்பார்க்கவில்லை

பிறந்த திகதி-01.04.1988
மதம்-இந்து
ஜாதி- V ஆண்
நட்சத்திரம் - உத்தராடம்(2)
கி.பா-15
செவ்-9ல்
தகைமை-B.B.M HONS
தொழில்-COMPANY MANAGER
எதிர்பார்ப்பு- பட்டதாரி மணமகள்

பிறந்த திகதி-09.02.1989
மதம்-இந்து
ஜாதி- V ஆண்
நட்சத்திரம்-உத்தரட்டாதி
கி.பா-35
செவ்-7ல்
தகைமை-B.B.A
தொழில்-ஆசிரியர்
எதிர்பார்ப்பு- பட்டதாரி அரச சேவை மணமகள்

பிறந்த திகதி-29.03.1992
மதம்-இந்து
ஜாதி- V ஆண்
நட்சத்திரம்-திருவோணம்
கி.பா-59
செவ்-8ல்
தகைமை-N.DQ
தொழில்-போதனாசிரியர்
எதிர்பார்ப்பு- பட்டதாரி அரச சேவை மணமகள்

மணமகள் விபரம்

பிறந்த திகதி-07.05.1988
மதம்-இந்து
ஜாதி- விஸ்வகுலம்
நட்சத்திரம்-உத்தராடம் ()
கி.பா-23
செவ்-9ல்
தகைமை-B.A
தொழில்-D.O அரசசேவை
எதிர்பார்ப்பு- பட்டதாரி அரச சேவை கொழும்பு

பிறந்த திகதி-03.11.1994
மதம்-இந்து
ஜாதி- விஸ்வகுலம்
நட்சத்திரம்-மகம்
கி.பா-43
செவ்-6ல்
தகைமை-M.B.B.S
தொழில்-DOCTOR
எதிர்பார்ப்பு- DOCTOR மணமகன்

.பிறந்த திகதி-16.11.1990
மதம்-இந்து
ஜாதி- விஸ்வகுலம்
நட்சத்திரம்-சுவாதி
கி.பா-37
செவ்-6ல்
தகைமை-B.A
தொழில்-ஆசிரியர்
எதிர்பார்ப்பு- அரச சேவை மணமகன்

பிறந்த திகதி-16.10.1993
மதம்-இந்து
ஜாதி- N பகுதி
நட்சத்திரம்-சுவாதி
கி.பா-51
செவ்-12ல்
தகைமை-கல்வியியற் கல்லூரி
தொழில்-ஆசிரியர்
எதிர்பார்ப்பு- வெளிநாடு- அரச சேவை மணமகன்

பிறந்த திகதி-12.03.1991
மதம்-இந்து
ஜாதி- N பகுதி
நட்சத்திரம்-உத்தராடம் (4)
கி.பா-35
செவ்-12ல்
தகைமை-B.A
தொழில்-D.O அரசசேவை
எதிர்பார்ப்பு- அரச சேவை வெளிநாடு- மணமகன்

பிறந்த திகதி-24.06.1990
மதம்-இந்து
ஜாதி- குருகுலம்
நட்சத்திரம்-புனர்பூசம் ()
கி.பா-28
செவ்-12ல்
தகைமை-B.SC, M.SC
தொழில்-பட்டதாரி ஆசிரியர்
எதிர்பார்ப்பு- வெளிநாடு- உள்நாடு அரசசேவை மணமகன்


பிறந்த திகதி-21.05.1987
மதம்-இந்து
ஜாதி- குருகுலம்
நட்சத்திரம்-மிருகசீரிடம்
கி.பா-7
செவ்-12ல்
தகைமை-M.B.B.S
தொழில்-DOCTOR
எதிர்பார்ப்பு- DOCTOR மணமகன்

பிறந்த திகதி-28.11.1990
மதம்-இந்து
ஜாதி- குருகுலம்
நட்சத்திரம்-ரேவதி 5'5"
கி.பா-34
செவ்-1ல்
தகைமை-IT DIPLOMA
தொழில்-COMPANY
எதிர்பார்ப்பு- அரச சேவை வெளிநாட்டு மணமகன்

Australia, Canada, UK, USA,Swiss, Germany, Italy, France, Newzeland- இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் இல்லாதவர்கள் மணமகன் மணமகள் விவரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.
காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

Northern PC Park
BenQ
வடக்கின் கணினிப் பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park  Npcpark  northernpcpark  Northern PC Park

Personal English Classes
K.Ganesh (BA.Pera)
யாழ்.நகரில் தனி வகுப்புக்கள்
Grade 7 - GCE O/L, A/L,
பட்டதாரிகள், தொழில்புரிவோர்
சரளமாக ஆங்கிலம் பேசவும், எழுதவும்.
G.C.E. O/L English Literature
077 766 8725
யாழ்நகர்.



அண்ணா விரைவுப் பொதிகள் சேவை
075 330 5500,070 330 5500
076 122 1566
யாழ்ப்பாணம் - நல்லூர்- வட்டுக்கோட்டை - சங்கானை - சுன்னாகம் - ஆவரங்கால்- நெல்லியடி - கைதடி - சங்கத்தானை - பளை - கிளிநொச்சி - புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு - கனகராயன்குளம் - மல்லாவி -மன்னார் - வவுனியா - திருகோணமலை- மூதூர் - கொழும்பு



POST YOUR AD yarlads.com
உங்கள் விளம்பரங்களை இலவசமாகப் பதிவிட

இறைச்சிக் கோழி விற்பனை
புறொய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500



சசிகா லேணர்ஸ்
Reg.No:DS882
THE SASIKA LEARNERS
அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை
தலைமைக் காரியாலயம்:-
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
021 221 7578/ 7678
070 301 3011/ 077 949 5706
web:- sasikalearners.com
email:- sasikadrivingschool@gmail.com
உரிமையாளரின் தொடர்புக்கு:
0777 226 247/ 077 614 0361
கிளை நிறுவனங்கள் :-





| மல்லாகம் | பண்டத்தரிப்பு | சங்கானை | சாவகச்சேரி | காரைநகர் | நெல்லியடி | யாழ் மத்தி (Town) | புன்னாலைக் கட்டுவன் | வேலணை |
|---|---|---|---|---|---|---|---|---|
| T.P: 021 224 3393<br>070 301 3014<br>077 343 6622 | T.P: 021 225 2333<br>071 255 4135<br>077 434 3798 | T.P: 021 225 1664<br>070 301 3016<br>077 434 3149 | T.P: 021 227 0616<br>071 577 0616<br>077 435 3995 | T.P:<br>021 225 2454<br>070 510 2484 | T.P:021 226 0999<br>071 755 0999<br>077 261 2446 | T.P: 021 222 8004<br>070 301 5004<br>070 301 3017<br>077 998 6247 | T.P: 021 224 5001<br>076 384 0684<br>077 934 6509 | T.P:<br>021 221 5472<br>070 301 3012 |

காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## போதனையை மறந்ததால் வந்த வேதனை

**இலங்கையின் பெரும்பான்மையினரான பௌத்தர்களைப் பொறுத்தவரை இன்றைய முழுமதி நாள் மிக முக்கியதினம்.**

**சித்தார்த்த கௌதமர் அவதரித்ததும், கௌதம புத்தராக ஞானநிலை அடைந்ததும், அவர் உலக வாழ்வைத் துறந்ததும் இந்த வைகாசிப் பூரணை தினத்தில்தான்.**

**கௌதம புத்தரையும், அவரது போதனைகளையும் தங்கள் வழிகாட்டுதல்களாகக் காட்டும் இலங்கையின் பௌத்த சிங்கள மக்களுக்கு, அதனால் இந்தநாள் மிக முக்கியமாகின்றது.**

**இன்றைய நேபாளத்தில் – இமயமலையின் அடிவாரத்தில் – கபிலவஸ்து மாவட்டத்தில் – லும்பிணியில் இந்தப் பௌர்ணமி தினத்தில்தான் அரச குமாரனாகப் பிறந்தார் சித்தார்த்தர்.**

**தமது 35ஆவது வயதில் இந்தியாவின் பீஹார் மாவட்டத்தில் கயா எனும் இடத்தில் போதி மரத்தின் கீழ் அமர்ந்த அவர் அங்கு இந்தப் பௌர்ணமி தினத்தில்தான் ஞானநிலை அடைந்தார். புத்தரானார்.**

**சுமார் நாற்பத்தைந்து ஆண்டுகள், உலகின் உயரிய மார்க்கம் ஒன்றின் ஸ்தாபகராகவும், வழிகாட்டியாகவும் விளங்கிய புத்தர், கிறிஸ்துக்கு முன் 438 இல் இதே வைகாசி பூரணை நாளில் உத்தரப் பிரதேசத்தில் உள்ள குசி நகரில் பரிநிர்வாணம் அடைந்தார்.**

**அவரது உயர்ந்த மார்க்கத்தின் நிலைக்களனாக இருப்பது இலங்கை.**

**அவர் தாம் கண்ட நான்கு அதிசய சத்தியங்களையும் (நான்கு உண்மைகளையும்), பஞ்ச சீலங்களையும், எண் வகை மார்க்கங்களையும் கைக் கொண்டு வாழும்படி உரைத்துச் சென்றார்.**

**புத்தர் போதித்த பஞ்சசீலம் முக்கியமானது. கொல்லாமை, திருடாமை, காம வெறியின்மை, பொய்யாமை, குடியாமை ஆகியவையே அவை. மறுபுறத்தில் இவற்றைச் செய்வதை பஞ்சமா பாதகங்கள் என்று இந்துக்கள் கூறுகின்றனர்.**

**புத்தரின் இந்த பஞ்சசீலக் கொள்கை அரசியலில் சற்று மாறுபட்ட விளக்கத்துடன் முன்னெடுக்கப்படுகின்றது. தெய்வநம்பிக்கை, மனிதாபிமானம், தேசியம், குடியரசு, சமூக நீதி என இந்தோனேஷியத் தலைவர் சுகர்னோ 1945 இல் பஞ்சசீலத்தை வரையறுத்தார்.**

**திபெத் தொடர்பில் 1954இல் இந்திய – சீனப் பிரதமர்கள் இதே பஞ்ச சீலக் கொள்கையை புதிய வடிவத்தில் வார்த்து ஓர் ஒப்பந்தம் செய்தனர்.**

**ஒரு நாட்டின் கௌவரத்தையும், அதிகாரத்தையும் மற்ற நாடு மதித்து சமாதானமாக வாழ்வது, மற்ற நாட்டை ஆக்கிரமிக்காமல் இருப்பது, மற்ற நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடாமல் இருப்பது, மற்ற நாட்டுடன் இணங்கி, சம மதிப்புக் கொடுப்பது, மற்ற நாட்டின் ஒற்றுமையையும் இறையாண்மையையும் மதிப்பது என்று அந்த பஞ்சசீலக் கொள்கை அந்த ஒப்பந்தத்தில் விரிந்தது.**

**ஆனால், கௌதம புத்தன் போதித்த மார்க்கத்தை – பௌத்தத்தை – மதித்தலும் பேணுதலும் நாட்டினதும் அரசினதும் தலையாய கடமை என்று அரசமைப்புச் சரத்துகள் மூலமே உறுதி செய்து சட்டமாக்கியிருக்கும் இலங்கை நாட்டில், கௌதம புத்தன் போதித்த பஞ்சசீலமோ, காலக்கிரமத்தில் சர்வதேச அரசியல் ஊடாட்டங்களுக்கு ஏற்ப வகுக்கப்பட்ட பஞ்சசீலக் கொள்கைகளின் அடிப்படைகளோ பின்பற்றப்படவேயில்லை என்பதுதான் வேதனைக்குரியது.**

**புத்தன் போதித்த உண்மையான மார்க்கத்தில் – உயரிய வழிகாட்டலில் – இந்த நாடு வழிநடத்தப்பட்டிருக்குமானால், இங்கு மூன்று தசாப்தகால கொடூர யுத்தமோ, இனவன்முறைகளோ, சிறுபான்மையினர் அடக்கப்படும் கொடூரமோ, இன்றைய அவல வாழ்வோ வந்திருக்காது என்பது உறுதி.**

**புத்தனின் உயரிய போதனைகளைப் புறம் ஒதுக்கி, மதவெறி பிடித்த பேரினவாதம், மொழித் திமிரோடு சந்நதம் கொண்டிருப்பதால், புத்தன் போதித்த சீலம் மறைந்து அவலமே நம்மை ஆள்கொண்டிருக்கின்றது.**

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் தொடர்பான ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் ஊடக அறிக்கை

மரபுவழியான தமிழர் தாயகப் பிரதேசங்களில் எமது வாழ்வியல், வரலாறு மற்றும் பண்பாடுகள் மீதான புற வல்லாதிக்கத்தை நாம் பலதசாப்தங்களாக அனுபவித்து, வந்திருக்கின்றோம்.

இந்த நிலையில் உலக ஒழுங்கியலுக்கு ஏற்றவாறான, நியாயமான எமது சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை பல்வேறு தளங்களில், வடிவங்களில் முன்னகர்த்தி ஈழத் தமிழர்களாகிய நாம் இன்றுவரை போராடிய வண்ணம் இருக்கின்றோம். எமது தீர்க்கமான, நியாயமான போராட்ட இலக்குகளை சர்வதேசமும், அதன் பல்தேசிய அமைப்புக்கள் பலவும் அங்கீகரித்து வந்திருக்கின்றன, வருகின்றன.

– இவ்வாறு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் தொடர்பாக ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

உலகின் சில சர்வதேச, பிராந்திய வல்லரசுகள் பேரினவாத அரசுடன் கரங்கோர்த்து, தத்தமது சுய அரசியல் இலாபங்களுக்காக, உலக நீதியின் ஒழுக்கிற்கு வெளியேநின்று எமது ஆயுதப்போரை இரும்புக்கரங்கொண்டு நசுக்கி மௌனிக்கச் செய்தமை உலகறிந்த உண்மை. 'சமாதானத்துக்கான போர்' என்ற பெயரில் ஒரு மிலேச்சத்தனம் அரங்கேறி தாண்டவமாடியது.

2009இன் இதே போன்றதொரு வாரத்தில் முடித்து வைக்கப்பட்ட இந்தக் கோரத்தனத்துக்கு இரையாக, எமது இனத்தின் ஒரு பகுதியினர் கொத்துக் கொத்தாகக் கொன்றழிக்கப்பட்டனர். தாய் தந்தையரை, கணவனை, மனைவியை, பிள்ளைகளை பலி கொடுத்த பல்லாயிரம் குடும்பங்கள் உள்ளன. அங்கங்கங்களை இழந்து ஆயிரமாயிரம் பேர் நிர்க்கதியாக்கப்பட்டனர்.

இனவழிப்பு நிலத்தின் பட்டினியும், பயமும், உளவியல் தாக்கமும் தமிழினத்தின் அடுத்த சந்ததியின் அத்திபாரக் கற்களையும் அசைத்துச் சென்ற கொடூரத்தை, மிகப்பெரிய மனித அவலத்தை இன்றுவரை சர்வதேசம் மறந்திருக்க வாய்ப்பில்லை.

ஆசாபாசங்களைத் துறந்து எமக்காகவும், எமது சந்ததிக்காகவும், எமது உரிமைக்காகவும், எமது சுய கௌரவத்துக்காகவும் இந்த தாங்கவொண்ணா வலிகளைச் சுமந்தவர் எங்கள் கண்முன்னே கரமிழந்து நிற்கின்றனர். எமது மக்கள் பட்டினியின் வாயில் படாதபாடு படுகின்றனர். எமது சமுதாயத்தின் இந்த இருள் நிலையை நாம் இலகுவில் கடந்துசென்றுவிட முடியாது. கண்முன்னே பற்றி எரிந்துகொண்டிருக்கும் அவர்களின் அரும்பொட்டான வாழ்வை கண்டும் காணாது இருந்துவிட முடியாது. எனவே எமது மக்களின் வாழ்வாதாரங்களைக் கட்டமைப்பது எமது அவசரமும் அவசியமுமான காலக்கடமையாகும். எமது இனத்தின் போர்க்கால வடுக்களை ஆற்றும் மூலத்தேவைகளில் ஒன்றான இந்தக் கைங்கரியத்தை ஒருங்கி ணைந்த தமிழர் கட்டமைப்பாகிய நாம் இயலுமானவரை செய்ய விளைகின்றோம். இந்த மனிதாபிமானம் மிக்க பணியில் இணைந்து கொள்ள அர்ப்பணிப்புள்ள யாவரையும் இரு கரம் நீட்டி அழைக்கின்றோம்.

எமது மனித உரிமையின் மீது விழுந்த மிகப்பெரிய காயத்தை உலகம் மெல்ல மெல்ல மறந்து சென்றாலும் நாம் அதனை மறந்துவிட முடியாது. அந்தத் தழும்பின் அத்தனை வேதனைகளையும் அடுத்த சந்ததிக்கு கற்பிதங்களாக உணர்த்துதல் எமது வரலாற்றுக் கடமையாகும். அதுமட்டுமன்றி எமது வரலாற்றுத் துயரங்களை அடையாளப்படுத்தி அனுட்டித்தல் எமது மனித உரிமையுமாகும்.

எனவே எமது மக்களின் உயிர்களின் கொதிநிலையை அடையாளப்படுத்தும் இந்தப் புனிதமான முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தில் எமது பண்பாட்டின் வழியே ஆலயங்களிலும் வீடுகளிலும் விளக்கேற்றி, அந்த அழிக்கப்பட்ட ஆத்மாக்களை ஒரு கணம் நினைவதோடு அன்று எம்மவர் அனுபவித்த பசிப்பிணியை எடுத்து இயம்பும் முள்ளிவாய்க்கால் கஞ்சியை காய்ச்சி அனைவருக்கும் வழங்கி ஒரு நாளேனும் ஒரு பொழுதேனும் அதனைமட்டும் உணவாகக்கொள்வோம்.

அதே நேரம் போரின் கோர வடுக்களை சுமந்து நலிவுற்ற எம் மக்களுக்கு எம்மாலான அறப்பணியை நாமும் செய்து அனைவரையும் தூண்ட இந்த நினைவழியா நாள்களான முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தில் உறுதியேற்க வேண்டிநிற்கின்றோம். – என்றுள்ளது.

## ஒருமித்த கருத்தை நாடாளுமன்றில் ஏற்படுத்துங்கள் சட்டத்தஷ்ணிகள் சங்கம் பிரதமர் ரணிலிடம் வலியுறுத்து

புதிய பிரதமராக பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் கூடிய விரைவில் அரசியல் கட்சிகளுக்கு இடையில் ஒருமித்த கருத்தை ஏற்படுத்துவதற்கான தனது இயலுமையை வெளிப்படுத்த வேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சம்மேளத்தின் செயற்குழு கோரியுள்ளது.

பொதுமக்களின் நலன்களுக்காக ஒரு பொதுவான குறைந்தபட்ச திட்டத்தை செயல்படுத்தும் வகையில், தேசிய ஒற்றுமைக்கான அரசாங்கத்தை உருவாக்க அவர்; முயற்சிக்க வேண்டும் என்று சம்மேளனம் வலியுறுத்தியுள்ளது.

ஏற்கனவே தாம் வெளியிட்டிருந்த முன்மொழிவுகளை மேற்கோள்காட்டியுள்ள சட்டத்தரணிகள் சம்மேளனம், நாடாளுமன்றத்தின் இருப்பை மட்டும் நம்பாமல், நாடாளுமன்றத்திற்குள் அனைத்து அரசியல் கட்சிகளிடையே ஒருமித்த கருத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு பிரதமரை நியமிக்க வேண்டியது அவசியத்தை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

அரசமைப்பின் 21ஆவது திருத்தத்தை அறிமுகப்படுத்துதல் மற்றும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்தல் உட்பட முன்மொழியப்பட்ட முக்கியமான அரசமைப்புத் திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கம் தெளிவான காலக்கெடுவை உருவாக்குவது மிகவும் அவசியமாகும்.

மிகப்பெரிய நிச்சயமற்ற தன்மை, அதிருப்தி மற்றும் துன்பம் நிறைந்த இந்த காலகட்டத்தில், புதிய அரசாங்கம் வெளிப்படைத்தன்மையுடனும் தொலைநோக்கு நோக்கத்துடனும் செயற்படுவது இன்றியமையாதது என்றும் சட்டத்தரணிகள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

## முள்ளிவாய்க்கால் படுகொலை வாரத்தின் 3 ஆம்நாள் நினைவு யாழ். பல்கலையில்!





யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தின் மூன்றாம் நாள் நினைவேந்தல் ஆத்மார்த்த ரீதியாக அனுஷ்டிக்கப்பட்டது.

பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியில் நேற்று மதியம் 12 மணியளவில் முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை செய்யப்பட்ட ஆத்மாக்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது முள்ளிவாய்க்கால் நினைவு தூபிக்கு மாணவர்களாலும் பல்கலைக்கழக ஊழியர்களாலும் மலரஞ்சலி செலுத்தப்பட்டதோடு ஈகைச்சுடர் ஏற்றி ஒரு நிமிட அகவணக்கமும் செலுத்தப்பட்டுள்ளது.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# ராஜபக்ஷ அரசின் திருடர்களை பிடிக்க விரைவில் நடவடிக்கை!



## அகிலவிராஜ் காரியவசம் தெரிவிப்பு

ராஜபக்ஷ அரசாங்கத்தின் திருடர்களை சட்டத்துக்கு முன் நிறுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்போம்.

அதில் எந்த மாற்றமும் இல்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகமான சிறிகொத்தாவில் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

ராஜபக்ஷவினரின் திருட்டு நடவடிக்கைகளுக்கு கடந்த காலங்களில் நடவடிக்கை எடுக்காமல் அவர்களைப் பாதுகாப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வந்தது என்ற குற்றச்சாட்டு இருந்தது.

என்றாலும் யாரையும் பாதுகாக்க நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. திருடர்கள் மற்றும் மோசடிக்காரர்களுக்கு எதிராக சட்ட ரீதியிலேயே நடவடிக்கைகளை எடுத்தோம்.

தற்போதும் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவி ஏற்றிருக்கின்றார். அதனால் திருடர்களைப் பாதுகாக்க ஒருபோதும் நடவடிக்கை எடுக்கப்போவதில்லை. திருடர்களை சட்டத்துக்கு முன் நிறுத்தும் வேலைத்திட்டத்தை நாங்கள் செய்வோம். இதுதொடர்பாக சட்டத்தரணிகள் சங்கத்தின் பல்வேறு கருத்துக்கள் இருக்கின்றன.

அதுதொடர்பாகவும் ஆராய்ந்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்போம். அதன் பொறுப்புகள் அவர்களுக்கும் வழங்கும் வகையில் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்க இருக்கின்றோம்.

அத்துடன் மோசடி, திருட்டுக்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் அரசாங்கத்துக்கு ஆதரவளித்தாலும் அனைவருக்கும் ஒரு மாதிரியே நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த காலங்களைப்போன்று அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பவரைப் பாதுகாக்கவும் எதிராக இருப்பவர்களின் மோசடிகளை மாத்திரம் கண்டுபிடித்து தண்டனை வழங்கும் நடவடிக்கைகள் தற்போது முடியாது. மக்களுக்கு இந்த நடவடிக்கைகள் அனைத்தும் தெரியும். என்றாலும் கடந்த அரசாங்கத்தில் பலருக்கு நீதிமன்றங்களில் விடுவித்து விடுதலை செய்திருக்கின்றது.

அவ்வாறான தீர்ப்புக்களை மீண்டும் சவாலுக்கு உட்படுத்த எமக்கு அதிகாரம் இல்லை. – என்றார்.

# இறுதித் தருணத்தில் திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்ததை போன்றது சஜித்தின் தீர்மானம்

## விமல் வீரவன்ஸ சாட்டை



சர்வக்கட்சிகளை உள்ளடக்கிய இடைக்கால அரசாங்கத்தை அமைக்கும் யோசனையை ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவே இல்லாதொழித்தார்.

இறுதிதருணத்தில்தானும்திருமணத்துக்குத் தயார் என்று குறிப்பிடுவதைப் போன்றே அவர் இறுதி தருணத்தில் பிரதமர் பதவியை ஏற்கத் தயார் என ஜனாதிபதியிடம் குறிப்பிட்டுள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

இலங்கை கம்யூனிஸ கட்சி காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளைப் பொறுப்பேற்றுக்க கொள்ளுமாறு எமக்கு அழைப்பு கிடைக்கப்பெற்றுள்ளது இருப்பினும் சுயாதீனமாகச் செயற்படும் 10 கட்சிகளின் உறுப்பினர்கள் எவரும் அமைச்சு பதவிகளைப் பொறுப்பேற்கப் போவதில்லை.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு நாடாளுமன்றில் பெரும்பான்மை பலம் இல்லை என்பது உறுதிப்படுத்தும் பட்சத்தில் பிரதமர் பதவி தொடர்பில் கேள்வி நிலை தோற்றம் பெறும். பெரும்பான்மை பலத்தை உறுதிப்படுத்துவது பிரதமரின் செயற்பாட்டைப் பொறுத்து தீர்மானிக்கப்படும்.

சர்வக்கட்சிகளை உள்ளடக்கிய இடைக்கால அரசாங்கத்தை அமைக்கும் யோசனையை ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவே இல்லாதொழித்தார்.

இறுதி தருணத்தில் தானும் திருமணத்துக்குத் தயார் என்று குறிப்பிடுவதை போன்றே அவர் இறுதி தருணத்தில் பிரதமர் பதவியை ஏற்கத் தயார் என ஜனாதிபதியிடம் குறிப்பிட்டுள்ளதை எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. – என்றார்.

# ராஜபக்ஷக்களின் பிரதிநிதியாக பிரதமர் ரணில் செயற்படுகின்றார்!

## இராதாகிருஷ்ணன் குற்றச்சாட்டு



ஜனாதிபதி கோட்டாபயராஜபக்ஷபதவி விலக வேண்டும் என்பதே நாட்டு மக்களின் கோரிக்கை. அந்த கோரிக் கையை ஏற்றே ஐக்கிய மக்கள் சக்தி பிரதமர் பதவியை ஏற்கவில்லை.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ஷக்களின் பிரதிநிதியாக செயற்படுகின்றார். அவர் ராஜபக்ஷக்களுக்கு விலை போய் விட்டார்.

ஆதலால் அவருக்கு ஆதரவு வழங்க முடியாது என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வீ. இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவித்தார்.

நுவரெலியாவில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

ரணில் விக்கிரமசிங்க இந்நாட்டில் 5 தடவைகள் பிரதமர் பதவியை வகித்தவர்.

இம்முறை 6 ஆவது தடவையாகவும் பதவியேற்றுள்ளார். எனினும், எந்தவொரு முறையும் தனது பதவிக் காலத்தை அவர் முழுமையாக பூர்த்தி செய்தது கிடையாது.

கடந்த பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட ரணில்விக்கிரமசிங்கவால் 20 ஆயிரம் வாக்குகளைக்கூட பெற முடியாமல் போனது.

தேசியபட்டியல் ஊடாக நாடாளுமன்றம் வந்தார். அவருக்கு மக்கள் ஆணை இல்லை. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என்பதே நாட்டு மக்களின்கோரிக்கை.

அந்த கோரிக்கையை ஏற்றே ஐக்கிய மக்கள் சக்தி பிரதமர் பதவியை ஏற்கவில்லை. ஜனாதிபதி பதவி விலகினால் தான் ஆட்சி பொறுப்பேற்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

ஜே.வி.பியும் இதே நிலைப்பாட்டில்தான் உள்ளது. ஆனால் ராஜபக்ஷக்களுடன் ரணில் இணைந்துள்ளார்.

மொட்டுக்கட்சி ஆட்சி தான் வரபோகின்றது. ராஜபக்ஷ போய், ரணில் வந்துள்ளார். இதுதான் ஏற்பட்டுள்ளமாற்றம்.

இதனை மக்கள் ஏற்க மாட்டார்கள். நாடாளுமன்றம் எதிர்வரும் 17 ஆம் திகதி கூடும் போது, ரணிலுக்கு பெரும்பான்மை உள்ளதா என்பது தெரிய வரும்.

புதிய அரசில் இணைய மாட்டோம். அமைச்சுப் பதவிகளை ஏற்கமாட்டோம். எதிரணியில் இருந்து செயற்படுவோம். ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம்.

ரணில் விலைபோய் விட்டார். ராஜபக்சக்களின் பிரதிநிதியாகவே செயற்படுகின்றார். இவருடன் இணைத்து கூத்தடிக்க முடியாது என்றார்.

# ரணில் விக்கிரமசிங்கவிற்கு பிரதமர் பதவி அதிஷ்ட இலாபச்சீட்டாக கிடைத்துள்ளது!

## உதய கம்மன்பில தெரிவிப்பு

அரசியல் தீவிரவாத செயற்பாட்டிற்கு நாட்டு மக்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்திய காரணத்தால் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகினாரே தவிர சர்வக்கட்சிகளை உள்ளடக்கிய இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கு அல்ல.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அதிஷ்ட இலாபச்சீட்டு கிடைத்துள்ளது என முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இலங்கை கம்யூனிசக் கட்சியின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவிற்கு ஜனாதிபதித் தேர்தலும்,பொதுத்தேர்தலிலும் கிடைக்கப்பெற்ற மக்களாணைக்கு முரணாகவே ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமித்துள்ளார்.

சர்வகட்சி தலைமையிலான இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்திருந்த போதும் அதற்கு மக்கள் விடுதலை முன்னணி இணக்கம் தெரிவிக்கவில்லை. இவ்வாறான பின்னணியில் மாற்று நடவடிக்கைகள் ஏதும் இல்லாத காரணத்தால் ஜனாதிபதி இவ்வாறான தீர்மானத்தை மேற்கொண்டுள்ளார்.

சமூக கட்டமைப்பில் தற்போது தோற்றம் பெற்றுள்ள சகல பிரச்சினைகளுக்கும் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட அவரது தரப்பினர் மாத்திரம் பொறுப்புக்கூற வேண்டும்.

அரசியல் தீவிரவாத செயற்பாட்டிற்கு நாட்டு மக்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியதை தொடர்ந்து முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகினாரே தவிர சர்வக்கட்சிகளை உள்ளடக்கிய இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கு அல்ல என்பதை தெளிவாக குறிப்பிட்டுக் கொள்ள வேண்டும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கும் நோக்கம் எமக்குக் கிடையாது.

அவர் தலைமையிலான அரசாங்கத்தில் எவ்வித அமைச்சு பதவிகளையும் பொறுப்பேற்க போவதில்லை.

நாட்டுக்கு நன்மை பயக்கும் தீர்மானங்களுக்கு மாத்திரம் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். – என்றார்.

# முதுமைக்கால மறதிநோயும் முறையான பராமரிப்பும்



முதுமைக்கால மறதி நோய், அதாவது 'டிமென்ஷியா'வால் பாதிக்கப்பட்டவர்களைப் பராமரிப்பது சவால்மிக்கது. தமது பராமரிப்பில் இருக்கும் முதியவருக்கு 'டிமென்ஷியா' இருந்தால், முதலில் அதைப் பற்றி நன்கு அறிந்திருத்தல் அவசியம். தகவல்களை நன்கு அறிந்து கொண்டு தம்மால் எவ்வாறு சிறந்த பராமரிப்பு அளிக்க முடியும் என்பது தொடர்பில் நியாயமான எதிர்பார்ப்புகளைப் பராமரிப்பாளர் திட்டமிட இயலும். சரியான பராமரிப்புத் திட்டத்தைப் பின்பற்றி நன்குக் கவனித்துக்கொள்ள முடியும் என்பதைப் பராமரிப்பாளர் உணரும் போது, சவால்மிக்க தமது பணி சற்று எளிதாக மாறிவிடும். குளிக்க அல்லது சாப்பிட மறுத்தல், கத்துதல், இரவு நேரத்தில் தூங்காமல் விழித்திருத்தல் போன்ற பிரச்சினைகளை 'டிமென்ஷியா' நோயாளிகளிடம் வழக்கமாகக் காண முடியும்.

பராமரிப்பாளருக்கு இதுபோன்ற செயல்களைக் கட்டுப்படுத்தச் சிரமமாக இருக்கலாம். அச்செயலை நிறுத்தவும் தடுக்கவும் உடனடித் தீர்வு ஏதுமில்லை. ஆனால், முதுமைக்கால மறதிநோய் தொடர்பில் ஆதரவு அளிக்க வேண்டுமெனில் ஒருவர் மூன்று முக்கிய அம்சங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்றும் அவற்றில் கவனம் செலுத்தினால் கட்டுப்படுத்த முடியாத 'டிமென்ஷியா' நோயாளிகளின் செயல்களை அடிக்கடி நிகழாமல் பராமரிப்பாளர் பார்த்துக்கொள்ளலாம் என்றும் கூறப்படுகிறது.

இதனால், பராமரிப்பாளருக்கு ஏற்படக்கூடிய மன உளைச்சலும் குறையும். இதன்படி 'டிமென்ஷியா' உள்ளவர்களைப் பராமரிப்பது தொடர்பில் மூன்று முக்கிய அம்சங்கள் உள்ளன.

**1. 'டிமென்ஷியா' என்றால் என்ன என்பதை அறிந்திருக்க வேண்டும்**

முதுமைக்கால மறதிநோயால் மூளையில் மாற்றங்கள் ஏற்படும். அப்போது ஒருவரின் சிந்தனைத் திறன், திட்டமிடும் ஆற்றல், நினைவாற்றல், கருத்துப் பரிமாற்றத் திறன் ஆகியவை பாதிக்கப்படுகின்றன.

இதனால் எரிச்சலடையக்கூடிய 'டிமென்ஷியா' நோயாளி, தனது விருப்பு வெறுப்புகளை எப்படி வெளிப்படுத்துவது என்று தெரியாமல் கத்துவதன் மூலமாகவும் மற்றவர்களிடம் கடுமையாகப் பேசுவதன் மூலமாகவும் தம் உணர்வுகளைத் தெரிவிக்கலாம்.

சத்தத்தால் அதிகமாகப் பாதிக்கப்படுவது, சுவைத்தல் அல்லது நுகர்தலில் மாற்றத்தை உணர்வது போன்றவற்றால் தனக்குப் பிடித்தமான உணவுகளின் மீது நோயாளிக்கு விருப்பம் இல்லாமல் போகலாம். மூளை தொடர்பான இதுபோன்ற மாற்றங்களைக் கட்டுப்படுத்த முடியாது. எனினும், நோயாளிகளின் சூழ்நிலையையும் அவர்கள் ஈடுபடும் நடவடிக்கைகளையும் பராமரிப்பாளர்கள் மாற்றி அமைக்கலாம்.

**2. எதிர்பார்ப்புகளை குறைத்துக்கொள்ளவேண்டும்**

முதுமைக்கால மறதிநோய் ஒருவரைத் தாக்குவதற்குமுன் அவர் தம் குடும்பத்திற்காக அயராது உழைத்திருக்கலாம். சுதந்திரமாக இருந்ததுடன் சொந்தக் காலில் நின்றிருக்கலாம். இதையெல்லாம் 'டிமென்ஷியா' நோயாளியின் பராமரிப்பாளர் நினைவில் நிறுத்தவேண்டும்.


முக்கியமான தினங்களை ஞாபகம் வைத்துக்கொள்வது போன்ற செயல்கள் முன்னதாக எளிதாக இருந்திருக்கும். ஆனால் 'டிமென்ஷியா' வந்த நிலையில் அதுவும் சவாலாக மாறியிருக்கும். அதனால், நோயாளி 'முன்புபோல் இல்லை' என்பதைப் பராமரிப்பாளர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

எனவே, தற்போது 'டிமென்ஷியா' உள்ளவரின் ஆற்றல் என்ன, விருப்பம் என்ன என்பதைப் பராமரிப்பாளர் கருத்தில் கொள்ளவேண்டும். அதற்கு ஏற்ப, எதிர்பார்ப்புகளைத் திட்டமிடவேண்டும். இதனால், முதுமைக்கால மறதிநோயால் அவதியுறுவோரும் அவர்களின் பராமரிப்பாளர்களும் விரக்தி நிலையை அடையாமல் தடுக்க முடியும்.

**3. பராமரிப்பு முறையைத் திட்டமிட வேண்டும்**

அன்றாட வேலைகளுடன் ஈடுபாடு மிகுந்த நடவடிக்கைகளையும் இணைத்துத் திட்டமிட்டால் 'டிமென்ஷியா' நோயாளிகளின் மனநிலையைச் சீராக்கலாம். அவர்களிடத்தில் அமைதியை ஏற்படுத்தி அவர்களின் தூக்கத்தை மேம்படுத்தலாம். பராமரிப்பாளராலும் ஓய்வெடுக்க முடியும்.

போதுமான ஓய்வு கிடைக்கும் நிலையில் தனது பராமரிப்பு வேலையை வெறுக்கும் சாத்தியமும் குறையும். ஒருவருக்கு 'டிமென்ஷியா' இருப்பது உறுதியான உடன், அவரின் பராமரிப்பு முறை தொடர்பில் திட்டமிடல் அவசியம். நாளடைவில் மறதிநோய் மேலும் மோசமடைவதை இதுபோன்ற திட்டமிடுதல் குறைக்க உதவும்.



## மருத்துவக் கதிர்



# திக்கு வாயை சீர் செய்யும் வசம்பு





பல்வேறு நன்மைகளைக் கொண்ட வசம்பிற்கு, பிள்ளைவளர்த்தி என்ற பெயர் உண்டு. இது குழந்தைகளின் நரம்புகள் பலம்பெற்று மூளை சிறப்பாக செயல்பட உதவுகிறது. வசம்பு ஆறு, ஏரிக்கரையோரங்களில் வளரும் ஒரு வகைப் பூண்டு. இதன் பிறப்பிடம் தென் கிழக்கு அமெரிக்கா. சதுப்பு நிலங்கள், களிமண் மற்றும் நீர் பிடிப்புள்ள பகுதிகள் மிகவும் ஏற்றவை.

வசம்பு இஞ்சி வகையைச் சேர்ந்த மூலிகை. வசம்பின் வேர்கள் பழங்காலம் முதல் மருந்துகள் தயாரிப்பதற்குப் பயன்படுகின்றன. இலைகள் 2 - 3 அடி உயரம் வரை வளரும். வேர்கள் மஞ்சள் கிழங்கைப்போல் நெருக்கமான கணுக்களையுடையவை. இதன் தண்டு வேர் பெருவிரல் அளவு தடிமன் உடையதாகவும் தண்டின் மேற்பகுதி சாம்பல் நிறத்துடனும் இருக்கும். வசம்பு காரச்சுவையும், வெப்பத்தன்மையும் கொண்டது. உடல் வெப்பத்தை அதிகரிக்கும், பசியுண்டாக்கும், வயிற்று உப்புசம், வயிற்றுப் பொருமல், வயிறு கனமான உணர்வு போன்றவற்றுக்கு மருந்தாகும்.

**பயன்கள்**

வசம்பு வெப்பத்தை உண்டாக்கி பசியைத் தூண்டி வயிற்றிலே இருக்கின்ற வாயுவை அகற்றக்கூடிய தன்மை உடையது. இது வாந்தியை உண்டாக்குவதோடு நுண்புழுக்களை அழிக்கும் தன்மை உடையது.

வாய் குமட்டலையும், வாந்தியையும் உண்டாக்க வசம்பை நன்கு பொடி செய்து ஒரு கிராம் அளவு உட்கொள்ள வேண்டும்.

வசம்பை வறுத்துப் பொடித்து தேனில் கலந்து கொடுத்து வர எல்லா வகையான தொற்று நோய்களும் நீங்கி விடும். சளி, வாயு ஆகியவற்றை அகற்றி பசியை தூண்டும்.

வசம்பைக் கருக்கிப் பொடித்து 100 mg அளவாகத் தாய்ப் பாலில் கலக்கி சிறு குழந்தைகளுக்குக் கொடுக்க வயிற்றுப் பொருமல், வயிற்றுப் போக்கு, வயிற்றுவலி ஆகியவை தீரும்.

வசம்புத் துண்டை வாயிலிட்டுச் சுவைக்க, உமிழ் நீர் அதிகம் சுரக்கும். தொண்டைக் கம்மல் இருமலை அகற்றும்.

குழந்தைகளுக்கு உண்டாகும் காய்ச்சல், இருமல், வயிற்றுவலி இவை குணமாக வசம்புடன் அதிமதுரம் சேர்த்து கசாயமிட்டு காலை, மாலை இரண்டு வேளையும் கொடுக்கக் குணமாகும்.

வசம்பைச்சுட்டு, கரியைத் தேனில் குழைத்து, குழந்தைகளின் நாக்கில் பூச, நன்றாகப் பேசுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கும். குழந்தைகளுக்கு ஏற்படும் வாந்தி, பேதி கட்டுப்படும். வசம்பை தூள் செய்து தேனுடன் கலந்து திக்குவாய் உடையவர்கள் தினந்தோறும் காலையில் நாவில் தடவி வர பேச்சு திருந்தும்.

பசியைத் தூண்டவும், அஜீரணத்தைப் போக்கி வயிற்றில் சேர்ந்த வாயுவை நீக்கவும் வசம்பு ஒரு பங்கும் பத்து பங்கு வெந்நீரும் சேர்த்து ஊற வைத்து வடிகட்டி பதினைந்து மி.லி. முதல் முப்பது மி.லி. வீதம் அருந்தி வர வேண்டும். குழந்தைகளுக்கு உண்டான கழிச்சலுக்கும், இதனை கொடுக்கலாம்.

வயிறில் சேர்ந்த வாயுவை அகற்ற வசம்பை அடுப்பில் வைத்து சுட்டுக் கரியாக்கி, அதனை தேங்காய் எண்ணையுடன் கலந்து அடி வயிற்றில் பூசவேண்டும்.

வசம்பை விஷம் அருந்தியவர்களுக்கு உடனேயே இரண்டு, மூன்று டீஸ்பூன் கொடுத்தால் உள்ளிருக்கும் விஷம் முழுக்க வெளியே வந்து விடும்.

சகலவித விஷக்கடிகளுக்கும் இதன் வேரை வாயிலிட்டு மென்று வர விஷம் முறியும்.

வசம்பு கொடிய வித்தன்மையையும் போக்கக்கூடியது. அதனால் கட்டாயம் வீட்டில் வசம்பு வைத்திருக்க வேண்டியது அவசியம். வசம்பை விஷம் அருந்தியவர்களுக்கு உடனேயே இரண்டு, மூன்று தேக்கரண்டி கொடுத்தால் உள்ளிருக்கும் விஷம் முழுக்க வெளியே வந்து விடும்.

சுடு தண்ணீர், கருவேப்பிலை, மஞ்சள் தூள் ஆகியவற்றுடன் வசம்பை கலந்து கிருமிநாசினியாகவும் பயன்படுத்தலாம். வசம்பை அதிக அளவில் நீண்ட காலத்திற்கு உட்கொண்டால் கடுமையான வாந்தியையும், வயிற்றுக்குமட்டலையும் தூண்டும்.

வசம்புடன் மஞ்சளை வைத்து சிறிது நீர் தெளித்து மையாக அரைத்து தேள், பூரான், வண்டுக்கடிவாயில் பூசிவர விஷம் முறியும். கடுப்ப முற்றிலும் நீங்கும்.

தேங்காய் எண்ணெயில் வசம்பை பொடித்திட்டு, குப்பைமேனி சாறை சேர்த்து காய்ச்சி எண்ணெயை வடிகட்டி எடுத்து வைக்கவும். இந்த எண்ணெயை சிரங்கின் மீது தடவிவர சிரங்கு விரைவில் குணமாகும்.

வசம்புடன் பூண்டு வைத்து அரைத்து வெல்லத்துடன் சேர்த்துத் தின்றால் குடலில் உள்ள தீமை தரும் பூச்சிகள் மலத்துடன் வெளிப்படும்.

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page I English for all Sunday the 15th of May 2022



We welcome students' articles in word for publication

-Editor-

kalaikkathiredu@gmail.com


## What are they doing?

***Put the verb into the present continuous tense, then put the right number on the line***



a) He ..................... (have) a shower ..........

b) This lady ..................... (wear) a yellow swimsuit and she ............................ (sunbathe) ............

c) They ......... .......... (sit) at a picnic table and they ........ ......... (eat) ............

d) She ........... ........... (cross) the stepping logs.....

e) The children ................. (have) a picnic. The little girl ................ (drink) and her brother .......... (watch) Mum............

f) They ..................... (hold) bats and ........................ (play) tennis............

g) This girl ......... ............. (come) down the slide. She has got lovely ginger hair. .............

h) He ....... .......... (dry) his hair with a pink towel. ............

i) She ....... ......... (put) sun cream on her little boy's back. .................

j) She ....................... (relax) on a blue beach towel. She ....................... (keep) an eye on her kids.........................

k) These boys ................... (play) football.....................

l) This gentleman .................. (swim) in the lake.............................

m) This little boy has blond hair. He ................. (sit) in his paddling pool..................

n) This boy ........ ............. (float) on his float. He ..................... (lie) on his tummy........................

o) She ............. .......... (learn) to swim and so she ....................... (wear) arm bands................................

p) They ....... ......... (queue) up to buy snacks and drinks..................

## *Read the passage then answer the questions :*

I live in a house near the mountains. I have two brothers and one sister, and I was born last. My father teaches mathematics, and my mother is a nurse at a big hospital. My brothers are very smart and work hard in school. My sister is a nervous girl, but she is very kind. My grandmother also lives with us. She came from Italy when I was two years old. She has grown old, but she is still very strong. She cooks the best food! My family is very important to me. We do lots of things together. My brothers and I like to go on long walks in the mountains. My sister likes to cook with my grandmother. On the weekends we all play board games together. We laugh and always have a good time. I love my family very much.

***A.Choose the best answer :***

1 - My mother is a.........
 1. teacher 2. writer 3. doctor 4. nurse

2 - My house is near the....................
 1. mountains 2. city 3. Italy 4. river

3 -How old was I when my grandmother came?
 1. Ten years old 2. Two years old
 3- Just born 4-Three years old

4 - On the weekends, we........
 1. cook pasta 2. go to a movie
 3. play board games 4. clean the house

5- My sister is kind, but also..........
 1. Nervous 2. Strong 3. calm 4. Quiet

***B.Get from the passage :***

1 . A school subject ... ..........
2. A job ......
3. The opposite of alone ....................worst .........short ......
4. The meaning of remain .............. clever ........
5. A country ....................
6. The pronoun she refers to ............
7. A place where sick people go to get help ................



Complete each analogy using a word from the word box.


***An analogy is a comparison of two pairs of words that are related in a similar way.***

| | | | | |
|---|---|---|---|---|
| hand | water | girl | eat | foot |
| scale | grass | day | vegetable | dinner |

Car is to road as boat is to **water**




Moon is to night as sun is to ..................



Straw is to drink as spoon is to ..............



Hat is to head as shoe is to .....................



Blue is to sky as green is to ...................



Morning is to breakfast as evening is to .......




Bird is to feather as fish is to .....................




Brother is to boy as sister is to ................



Toe is to foot as finger is to ...........



Apple is to fruit as carrot is to ............



**It does not matter how slowly you go as long as you do not stop - Arbic wisdom**

# What is personal hygiene?

Good personal hygiene is one of the best ways to protect yourself from getting gastro or infectious diseases such as COVID-19, colds and flu. Washing your hands with soap removes germs that can make you ill. Maintaining good personal hygiene will also help prevent you from spreading diseases to other people.

***Personal hygiene includes:***

* cleaning your body every day
* washing your hands with soap after going to the toilet
* brushing your teeth twice a day
* covering your mouth and nose with a tissue (or your sleeve) when sneezing or coughing
* washing your hands after handling pets and other animals

***Why is personal hygiene important?***

Good hygiene is vital because it helps prevent you and your children from getting or spreading germs and infectious diseases. The germs that cause many diseases can be passed on through touching other people, getting faeces (poo) on your hands, handling contaminated food, or coming into contact with dirty surfaces or objects.

Conditions that you can develop if you have poor personal hygiene include:

Try to bathe or shower each day. Wash well, especially under your armpits and around your genitals and anus. Keeping clean will prevent skin irritations and remove bacteria that cause body odour.

Wash yourself with soap, shower gel or a hypoallergenic body wash. Soap removes more germs, but you may need to wash sensitive body parts with plain water or salt water.

If there is no tap water or it is scarce, clean yourself with a clean wet cloth or sponge.

***Washing your hands***

To avoid getting sick, wash your hands properly for at least 20 seconds.

* Wet your hands with water.
* Apply enough soap to cover all surfaces of your hands.
* Rub your palms together.
* Clean between the fingers and the back of your hands.
* Clean dirty nails with a scrubbing brush, if one is available.
* Rinse both sides of your hands, preferably under clean running water.
* Dry off your hands with a clean towel.
* Use the towel to turn off the tap.
* You can also use hand sanitiser. Make sure you use enough of the product to cover all surfaces of your hands. Make sure you rub the palms, backs of the hands and in between your fingers.

***When to wash your hands***



It is especially important to wash your hands after going to the toilet because faeces, which you might come into contact with, contains billions of germs. Also, wash your hands:

* before and after eating or preparing food
* after changing babies' nappies
* before and after touching a sick person or cleaning up vomit or body fluids
* after blowing your nose
* before and after treating cuts or wounds
* after touching rubbish, dirty surfaces or objects
* after handling pets or farm animals
* Find out more here about hand washing.

***Preventing body odour***

After washing, apply deodorant to your armpits. Put on clean, dry clothing. Wash sweaty or dirty garments well and, if possible, hang them outdoors to dry. If you have a problem with excessive sweating, make an appointment to see your doctor.

***Handling food safely***

Wash your hands before and after preparing food. This will stop you contaminating food and will also protect you from getting ill or passing on bacteria from foodstuffs, such as raw meat. Find out more here about food safety.

***Preventing bad breath***

Bad breath can be caused by poor oral hygiene. Brush and floss your teeth twice a day since this reduces gum disease and the chances of future tooth decay. Use these dental care tips and make an appointment with a dentist for a check-up if you have further symptoms.

# 5 Simple Tips for Fitness Success



Congratulations on taking a forward step to get in shape and feel great. Many people are guilty of wishing they could get a sculpted body from eating junk food and watching TV all day. But that is just not going to happen. Even though getting in shape sounds like a long, time-wasting process, the effort put towards being in shape has many positive effects. If you want to start your journey to having a better body to feel great, here are some tips:

***1. Exercise Daily***

Exercise daily for at least an hour. You do not have to kill yourself from running, jogging, etc., but you should have some sort of moderate physical activity in your everyday life. If you're looking to shed a few pounds fast, do a higher-level intensity workout. For example, go on a walk at a brisk pace for an hour. Or, you can jog and set certain intervals to sprint during that hour. Make sure you're not in severe pain during your workout. Just a warning, your muscles will ache after a high intensity workout. It may be irritating, but that means your body is changing for the better. Be sure to stay hydrated, stretch, and eat foods with a decent amount of protein after each workout. The protein will help keep your muscles, not fat, rebuilding.

***2. Eat the Right Foods and Portion Each Meal***

No matter how bad your stomach is telling you to go for candy over healthy food, try to stay away from sweets. Sugar from candy will not help you get in shape. Even if it's just a single candy bar, one will eventually lead to another. Fruits and vegetables are the best thing to eat when getting into shape. Apples, for example, do a good job at making the stomach feel full for up to 3 to 4 hours. Green vegetables such as green beans and broccoli keep the digestive system clean and running.

Also, stick to lean meats like turkey and chicken. Seafood, such as, shrimp, and tilapia are also great alternatives. These foods are full of protein and healthy nutrients to help keep muscles fit and ready for workouts. In addition, be sure to portion what you eat. Having a good metabolism comes from portioning meals. Try to plan out eating six times a day and setting smaller portions, rather than having three large meals throughout the day. This will also help you find yourself breathing smoother when working out rather than huffing and puffing for air. This is because you will have less food in your digestive system, which means more energy is used toward your exercise.

***3. Keep Track of Calories and Food Intake Per Day***

Keeping track of how many calories you eat in a day will be helpful in planning out your physical exercising. Ever wonder why body builders' body masses are so big? That's because they plan out their meals and take in more (healthy) calories than the average person. On the other hand, losing weight and striving for a skinnier physique will involve more physical exercise than calories you ingest.

***4. Be Sure to Get Sleep***


Even though most of us have eight-hour jobs during the day or night, it is crucial to get enough sleep to recharge the body's batteries. Six to eight hours of sleep will keep the body going throughout the day, but if you happen to feel tired at any point after coming home from work, by all means take a small nap before exercising. You should only nap for about a half hour. This will prevent you from staying up later in the night.

***5. Stay Motivated***

An important key to being in shape is to set goals and keep a positive mindset. If you stay positive, you will be able to push yourself to get that fit body you've always wanted.

Erie Cross Training Examiner Kyle Melerski, a music technology student at Capital University, is on the rise by using his creative writing skills to inform and entertain people.

Examiner.com is the inside source for everything local. Powered by Examiners, the largest pool of knowledgeable and passionate contributors in the world, we provide unique and original content to enhance life in your local city wherever that may be.






## குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்

# புழுதிச் சாலையில் ஒரு வைரம்



அரசனுக்கே ஆசானாக இருந்தார் ஒரு குரு. ராஜகுருவாகவே இருந்தாலும், அரசபோகத்தை அனுபவிக்க விரும்பாத அவர், ஒரு தேசாந்திரியாக பயணித்து, மக்கள் தருவதைப் பெற்றுக் கொள்வது வழக்கம்.

ஒரு நாள் அந்த நாட்டின் தலைநகரை விட்டு, மற்றொரு நகரை நோக்கி நடந்தார். மாலை நேரமாகிவிட்டது. மழை வேறு. ஒரு கிராமம் எதிர்ப்பட்டது. முற்றாக நனைந்து விட்ட குரு, விவசாய பண்ணைக்கு நடுவில் இருந்த ஒரு வீட்டை அணுகினார். வீட்டுக்கு வெளியே நிறைய ஷூக்கள், நனையாமல் இருந்தன.

சரி, ஆட்கள் நிறைய இருக்கிறார்கள். நனையாத உடை, ஒரு ஜோடி ஷூ வாங்கி அணிந்து கொள்ளலாம் என்ற எண்ணத்தோடு உள்ளே நுழைந்தார். உள்ளேயிருந்து வந்த ஒரு பெண்மணி, குருவுக்கு ஒரு ஜோடி ஷூக்களை தந்தார். அவர் உடை நனைந்திருப்பதைப் பார்த்து, வேறு உடை மாற்றிக் கொள்ளுமாறும், இரவை அங்கேயே கழிக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

வீட்டு முகப்பில் ஒரு சிறு கோயில். அங்கு சிறிது நேரம் கண்மூடி நின்ற குருவுக்கு,

பின்னர் உள்ளே இருந்த தனது அம்மா மற்றும் குழந்தைகளை அந்தப் பெண்மணி அறிமுகப்படுத்தினார். ஆனால் அவர்கள் முகத்தில் ஏதோ ஒரு வாட்டத்தை அவர் கண்டார். ஏதோ சரியில்லை என்பது புரிந்ததும், என்ன அம்மா உங்கள் பிரச்சினை? என்று கேட்டார்.

அய்யா! என் கணவர் ஒரு சூதாடி, குடிகாரர். எப்போதெல்லாம் சூதாட்டத்தில் ஜெயிக்கிறாரோ, அப்போது இருக்கும் பணத்தையெல்லாம் குடித்துவிடுவார். தோற்கும்போது, வீட்டிலிருப்பதை எடுத்துப்போய் விடுவார். அல்லது கடன் மேல் கடன் வாங்குகிறார். சமயத்தில் குடித்துவிட்டு எங்கேயோ விழுந்துகிடந்து பின் வருகிறார். என்ன செய்வதென்றே புரியவில்லை, என்றார்.

கவலை வேண்டாம்! நான் உதவுகிறேன். இதோ என்னிடம் இவ்வளவு பணம் உள்ளது. நல்ல ஒயினையும், சாப்பிட உணவும் வாங்கி வாருங்கள். அதன் பிறகு நீங்கள் படுக்கப் போங்கள். நான் அந்தக் கோயிலில் சற்று நேரம் தியானம் செய்கிறேன், என்று அந்தப் பெண்ணிடம் பணம் கொடுத்து அனுப்பினார்.

சிறிது நேரத்தில் அப்பெண்ணின் கணவன் வந்துவிட்டான். மித மிஞ்சிய போதையில் இருந்தான். கால்கள் தரையில் நிற்கவில்லை! ஏய்! இங்க வாடி! நான் வந்துட்டேன்டி! என்ன பண்ற.. சாப்பாடு கொண்டா என்று சத்தமாகக் கேட்டான்.

உடனே அவனிடம் வந்த குரு, இதோ நான் தருகிறேன், நீ கேட்டதை, என்றார். பின்னர், மழையில் மாட்டிக் கொண்டேன். உன் மனைவிதான் இங்கு தங்க அன்போடு அனுமதித்தார். அதற்கு பிரதியுபகாரமாக நல்ல ஒயினும் சாப்பிட மீனும் கொண்டு வந்துள்ளேன், என்றார் குரு.

குடிகார கணவனுக்கு ஒரே சந்தோஷம். மொத்த ஒயினையும் குடித்தான். சாப்பிட்டான். அப்படியே தரையில் சரிந்து விழுந்து தூங்கிவிட்டான். குருவோ, அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து தியானம் செய்ய ஆரம்பித்துவிட்டார்.

விடிந்தது. கணவன் எழுந்து பார்த்தான். முந்தைய இரவு நடந்தது எதுவும் அவனுக்கு நினைவிலில்லை.

குருவைப் பார்த்தான். யார் நீ.. எங்கிருந்து வருகிறாய்? என் வீட்டில் என்ன வேலை? என்று கேள்விகளை வீசினான். புன்னகை மாறாத முகத்துடன் அவனது கேள்விகளை எதிர்கொண்ட குரு, நான் இந்த நாட்டு மன்னனின் குரு. பக்கத்து நகருக்குப் போய்க் கொண்டிருக்கிறேன், என்றார்.

ராஜகுரு என்றதும், அந்த குடிகார கணவன் திடுக்கிட்டான். தான் நடந்து கொண்டதை நினைத்து வெட்கமடைந்தான். தனது செயல் மற்றும் பேச்சுக்காக மன்னிப்பு கோரினான். குருவின் முகத்தில் புன்னகை மாறவில்லை. வாழ்க்கையில் எதுவும் நிரந்தரமில்லை. வாழ்க்கை குறுகியது. அந்த குறுகிய காலத்தில், குடி, சூதாட்டம் என இருந்தால், உடனிருக்கும் நல்ல உறவுகளை இழந்துவிடுவாய்.. குடும்பமே இல்லாமல் போய்விடும் என்பது தெரியவில்லையா?, என்றார்.

ஏதோ ஒரு ஆழ்ந்த கனவிலிருந்து விழித்துக் கொண்டவனைப் போல திடுக்கிட்டு எழுந்தான் குடிகார கணவன். ஆம்.. நீங்கள் சொல்வது சரிதான் குருவே!, என்றவன், உங்களின் இந்த அற்புதமான அறிவுரைக்கு நான் என்ன திருப்பித் தரப் போகிறேன், என உருகினான்.

கொஞ்ச தூரம் உங்களின் பொருள்களைத் தூக்கிக் கொண்டு உடன் வருகிறேன். ஒரு சிறிய சேவகம் செய்த திருப்தியாவது கிடைக்கும், என்றான் திருந்திய அந்த குடிகாரன். சரி! உன் விருப்பம், என்றார் குரு.

இருவரும் நடக்க ஆரம்பித்தனர். மூன்று மைல்கள் தாண்டியாயிற்று. அவனை திரும்பிப் போகச் சொன்னார் குரு. இன்னும் 5 மைல்கள் உடன் வருவதாய் அவன் தெரிவித்தான். ஐந்து மைல்கள் கடந்தது. 'சரி.. நீ போகலாம்' என்றார் குரு. இன்னும் ஒரு பத்து மைல்கள் வருகிறேனே! என்று மன்றாடினான்.

பத்து மைல்கள் கடந்ததும், கொஞ்சம் கண்டிப்பான குரலில், நீ இப்போது வீட்டுக்குத் திரும்பலாம், என்றார் குரு.

குருவே, இனி நான் பழைய பாதைக்கு திரும்புவதாக இல்லை. மிச்சமிருக்கும் நாளெல்லாம் தங்கள் வழியைப் பின்பற்றி நடப்பேன்!, என்றான் உறுதியான குரலில்!

## அம்மா



பாலும் சோறும் உண்ணத் தந்து
படிக்கச் சொல்லும் அம்மா
காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றிக்
கட்டிக் கொஞ்சும் அம்மா

புழுதி போக்கி நீருமாட்டி
பொட்டும் வைக்கும் அம்மா
அழுதிடாமல் பள்ளிக்கூடம்
அழைத்துச் செல்லும் அம்மா

பள்ளிக்கூடம் விட்ட நேரம்
பாதி வழிக்கு வந்து
துள்ளிக் குதிக்கும் என்னைத் தூக்கித்
தோளிற் போடும் அம்மா

## விடுகதைகளும் விடைகளும்

1. தலை இல்லாதவன் தலையை சுமப்பவன் அவன் யார் ?

தலையணை

2. காலடியில் சுருண்டிருப்பாள் கணீர் என்று குரலிசைப்பாள் அவள் யார் ?

மெட்டி

3. அடி மலர்ந்து நுனி மலராத பூ அது என்ன ?

வாழைப்பூ

4. அடர்ந்த காட்டின் நடுவே ஒரு பாதை அது என்ன ?

தலை வகிடு

5. அத்தையில்லா அத்தை என்ன அத்தை ?

சித்தரத்தை

6. அத்தானில்லா அத்தான் என்ன அத்தான் ?

மொடக்கத்தான்

7. அந்தரத்தில் தொங்குவது சொம்பும் தண்ணீரும் அது என்ன?

இளநீர்

8. அத்துவான காட்டிலே பச்சைப்பாம்பு தொங்குது அது என்ன?

புடலங்காய்

9. காலையிலும் மாலையிலும் நெட்டை மதியம் குட்டை நான் யார்?

நிழல்

10. பற்கள் இருக்கும் கடிக்கமாட்டான் அவன் யார்?

சீப்பு

11 ஓடுவான், வருவான் ஒற்றைக் காலில் நிற்பான் அவன் யார்?

கதவு,

12. பச்சைப் பெட்டிக்குள் வெள்ளை முத்து அது என்ன?

வெண்டைக்காய்,

13. கூரை வீட்டைப் பிரித்தால் ஓட்டு வீடு. ஓட்டு வீட்டுக்குள்ளே வெள்ளை மாளிகை. வெள்ளை மாளிகையின் நடுவே ஒரு குளம். அது என்ன?

தேங்காய்,

14. எதைக் கொடுத்தாலும் சாப்பிடுவேன். தண்ணீர் குடித்தால் இறந்துவிடுவேன். நான் யார்?

நெருப்பு,

15. ஊர் முழுவதும் சுற்றுவேன். வீட்டுக்குள் நுழைய மாட்டேன். நான் யார்?

செருப்பு,

## பழமொழிகள்

அக்கம்பக்கம் பார்த்துப் பேசு.
அகத்தி ஆயிரம் காய் காய்த்தாலும் புறத்தி புறத்திதான்.
அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
அகல் வட்டம் பகல் மழை.
அகல இருந்தால் நிகள உறவு, கிட்டவந்தால் முட்டப் பகை.
அகல உழுகிறதை விட ஆழ உழு.
அச்சமில்லாதவன் அம்பலம் ஏறுவான்.
அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது.
அசைந்து தின்கிறது யானை, அசையாமல் தின்கிறது வீடு.
அஞ்சிலே வளையாதது ஐம்பதிலே வளையுமா?





# பனை மரத்தின் வகைகள்

1. ஆண் பனை
2. பெண் பனை
3. கூந்தல் பனை
4. தாளிப்பனை
5. குமுதிப்பனை
6. சாற்றுப்பனை
7. ஈச்சம்பனை
8. ஈழப்பனை
9. சீமைப்பனை
10. ஆதம்பனை
11. திப்பிலிப்பனை
12. உடலற்பனை
13. கிச்சிலிப்பனை
14. குடைப்பனை
15. இளம்பனை
16. கூறைப்பனை
17. இடுக்குப்பனை
18. தாதம்பனை
19. காந்தம்பனை
20. பாக்குப்பனை
21. ஈரம்பனை
22. சீனப்பனை
23. குண்டுப்பனை
24. அலாம்பனை
25. கொண்டைப்பனை
26. ஏரிலைப்பனை
27. ஏசறுப்பனை
28. காட்டுப்பனை
29. கதலிப்பனை
30. வலியப்பனை
31. வாதப்பனை
32. அலகுப்பனை
33. நிலப்பனை
34. சனம்பனை



தமிழர்கள் வாழ்வில் தவிர்க்கமுடியாத இடம்பிடித்திருப்பது பனை. பனை மரம்தான் லட்சக்கணக்கான விவசாயிகளுக்கும், விவசாயக் கூலிகளுக்கும், பல லட்சம் கைவினைக் கலைஞர்களுக்கும் வாழ்வு கொடுத்தது. மன்னர்களும், ஆங்கிலேயர்களும் பனை வருமானத்தில் வரி வசூல் செய்து ஆட்சி புரிந்திருக்கிறார்கள். ஒரு பனை குறைந்தது 30 அடி உயரத்திற்கு வளர்வதோடு, பல உயிரினங்களுக்கு இருப்பிடமாக, கூடுகளை அமைத்து தங்களது இனத்தை விருத்தி செய்யவும், எதிரிகளிடமிருந்து காக்க உதவும் அரணாகவும் இருக்கிறது.

அணில்களும் எலிகளும் பனைமரத்தில் கூடு அமைத்து வாழ்கின்றன. உயரத்தில் பறக்கும் பறவைகளான பருந்துகளும் வானம்பாடிப் பறவைகளுக்கும் இருப்பிடமாகவும் பனை இருக்கின்றது. பனை ஓலையின் நுனியில்தான் தூக்கணாங்குருவிகள் தங்களின் அழகான கூடுகளை வடிவமைத்து கூட்டாக வாழ்கின்றன. பனைமரங்களில் வாழும் இந்தப் பறவைகள்தான் பகல் பொழுதில் வயல்களில் இருக்கின்ற பூச்சிகளையும், கூட்டுப்புழுக்களையும் உண்டு விவசாயத்திற்கு பல நன்மைகளைச் செய்கின்றன.

பழந்தமிழர் வாழ்வில் பனை மரமே பணம் தரும் மரம். அன்று கரும்புச் சர்க்கரை தோன்றவில்லை. இனிப்புக்கு இலுப்பைப் பூவும், பனங்கருப்பட்டியுமே பயனாயிற்று. போதைக்கு அன்று சாராயம், கசிப்பு இல்லை. பனங்கள் மற்றுமே பயனாயிற்று. படை வீரர்களுக்கு மன்னர்கள் பனங்கள் வழங்கியதைப் புறநானூறு தெரிவிக்கிறது. கலங்கல் என்பது பனங்கள்.

பனைமரத்தின் ஒவ்வொரு பாகமும் ஆதிகாலம் தொட்டே பயன்பாட்டில் உள்ளது. பனைமரத்திலிருந்து 834 விதமான பொருள்கள் மக்கள் பயன்பாட்டுக்கு கிடைக்கின்றன. பனை ஓலையில் வைக்கப்படுகின்ற பொருள்கள் எளிதில் கெட்டுப் போகாது. பனை தரும் பொருள்களில் ஏழைக்கேற்ற சத்துணவும் உண்டு. அதுவே பனங் கிழங்கு. கிராமங்களில் பெண்கள் பனங் கொட்டைகளை சேகரித்து மண்ணில் நெருக்கமாக நடவு செய்வார்கள். பனங் கொட்டை நடப்பட்ட 100வது நாளிலிருந்து அறுவடைக்கு ஏற்றதாய் மாறுகிறது.

பனைமரம் நம் முன்னோர்கள் வாழ்வில் பின்னிப் பிணைந்துள்ளது. இப்படி ஆண், பெண் என்று வகைப் படுத்தப்பட்டிருக்கும் பனையில், வேர், தூர்ப் பகுதி, நடு மரம், பத்தை மட்டை, உச்சிப் பகுதி, ஓலை, சில்லாட்டை, பாளை - பீலி, பனங்காய் (பெண் பனையில் மட்டும் காணப்படும்), பச்சை மட்டை, சாரை ஓலை, குருத் தோலை என 12 உறுப்புகள் உள்ளன. இந்த உறுப்புகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பயனைத் தரக் கூடியது.

பிளாஸ்டிக் பொருள்களின் வருகைக்கு முன்னர் பனை ஓலைகளைக் கொண்டுதான் கூடைகள், சாப்பிட உதவும் தொன்னைகள், தட்டுகள், குதிர்கள், பெட்டிகள், பாய்கள் போன்றவற்றை நம் முன்னோர் செய்து பயன்படுத்தினர். பனை மரம் வெறும் தாவரம் மட்டும் அல்ல தமிழர் வாழ்வின் அடையாளமாகவும் விளங்குகிறது. பனைமர பொருள்களை நம் அன்றாட வாழ்வில் மீண்டும் உபயோகப்படுத்த முன் வரவேண்டும். ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு விதையை இந்த மண்ணில் விதைத்துக் கொண்டே இருங்கள். அதிலும் குறிப்பாக தமிழர் இனத்தின் தேசிய மரம் பனையாகும். வேகமாக பனை மரங்கள் இந்த மண்ணை விட்டு மறைகின்றன. அதை மீட்க வேண்டியது தமிழர்களான நமக்கு மிகப் பெரிய கடமை ஆகும்.



# கல்விக்கதிர்



- அகரன் -

## வகுகவ்பிட்டிய ஊற்று மாரியம்மன்

புஸ்ஸல்லாவ பிரதேசத்திற்கு உட்பட்ட நுவரெலியா கண்டி பிரதான பாதையில் இருந்து சுமார் 300 மீற்றர் தூரத்தில் வகுகவ்பிட்டிய பிரதேசத்தில் ஊற்று மாரியம்மன் என்ற ஒரு சிறிய கோவில் காணப்படுகின்றது.

இந்த ஆலயம் இருக்கும் இடம் சுமார் 05 ஏக்கர் கொண்ட காட்டு பாதுகாக்கப்பட்ட பிரதேசமாகும். இந்த இடத்தில். விசித்திரமான ஊற்று நீர் ஒன்று காணப்படுகின்றது.

ஒரு பானையில் நீரை நன்கு கொதிக்க வைத்தால் அந்த நீர் எவ்வாறு கொதித்து பொங்கி எழுமோ அந்த அளவிற்கு இந்த நீர் ஓர் குறிப்பிட்ட இடத்தில் இருந்து பொங்கி வருகின்றது.

இந் நீர் மிகவும் குளிர்மையான செறிவு கூடியதாக விரும்பி பருகுவதற்கு சுவையானதாகவும் மருத்துவ குணமிக்கதாகவும் காணப்படுகின்றது.

அத்துடன் இந்த இடத்தில் காக்கா பொன்னு என்று சொல்லக் கூடிய கனிய வளமும் காணப்படுவதால் நீருடன் தங்க துகள்கள் போன்று காக்கா பொன்னும் நீரோடு பொங்கி எழுகின்றது.

பார்ப்பதற்கு மிகவும் புதுமையாகவும் மனதிற்கு ஆறுதலாகவும் கோயிலும் காணப்படுவதினால் தெய்வீக தனமாகவும் வியக்கதக்க வகையிலும் காணப்படுகின்றது.

எவ்வளவுதான் வெயில் காலம் வந்தாலும் இந்த நீர் ஊற்று வற்றுவதில்லை. சிறிய ஊற்றாக வெளி வந்து ஆறாக ஓடுகின்றது இந்த நீரை மக்கள் குடிப்பதற்கும் விவசாயம் செய்வதற்கும் பாவித்து வருகின்றனர்.

பொதுவாக புஸ்ஸல்லாவ, இறம்பொடை, நுவரெலியா போன்ற இடங்கள் இராமாயணத்திற்கு பெயர் போன இடங்கள்.

நுவரெலியாவிலேயே சீதை அம்மன் கோவில் காணப்படுகின்றது. அசோகவனமும் காணப்படுகின்றது. அரம்பத்தில் புஸ்ஸல்லாவ பிரதேசத்தில் இருந்தே அசோக வனம் ஆரம்பித்து உள்ளது. காலப்போக்கில் தேயிலை உற்பத்திக்காக காடுகள் அழிக்கப்பட்டு அசோகவனம் வேறாக பிரிக்கப்பட்டு விட்டது புஸ்ஸல்லாவ வேறாக்கப் பட்டு விட்டது.

இராமாயணத்தில் இராவணன் சீதை அம்மனை இந்தியாவில் இருந்து இராமேஸ்வரம்ச மன்னார் ,மாத் தளைவி புஸ்ஸல்லாவச வழியாக தனது புஸ்பக விமானத்தில் நுவரெலியாவிற்கு அழைத்து செல்லும் வழியில் சீதை அம்மன் இராமனை நினைத்து விட்ட கண்ணீரின் ஒரு துளி இப்பிரதேசத்தில் விழுந்துள்ளது.

இந்த கண்ணீர் விழுந்த இடம் தற்போதும் சீதை அம்மனின் கண்ணீராக பொங்கி நீராக வருகின்றது என்ற வரலாறும் உள்ளது.

அது உண்மையாக இருக்கலாம் காரணம் பல ஆண்டுகளுக்கு முன்னர் அருகில் உள்ள சோகம தோட்டத்தில் காணப்பட்ட அம்மன் சிலை ஒன்று களவாடப்பட்டு வேறோர் இடத்திற்கு இவ்வழியாக கொண்டு செல்லும் போது. இந்த இடத்தில் அந்த சிலை இயற்கையாகவே பூமிக்கு அடியில் சென்று விட்டதாம். அன்று முதல் இந்த நீர் ஊற்று உருவாகி சிலையின் நிறத்தில் தங்க துகள்களுடன் பொங்கி வருவதாக கூறுகின்றனர். தற்போதும் இந்நிலை காணப்படுகின்றது.

இராமயணத்துடன் தொடர்பு கொண்டதால் என்னவோ குறித்த இடத்தில் அனுமானின் உருவம் ஒன்று இயற்கையாகவே மரம் ஒன்றில் உருவாகி உள்ளது. இதையும் மக்கள் வணங்கி வருகின்றனர். இந்த காட்டுப் பகுதியில் குரங்குகளும் வசித்து வருவதுடன் தனக்கு உணவு தேவை ஏற்படும் போது ஆலயத்திற்கு வந்து உணவை பெற்று செல்கின்றன. அசோகவனத்தை ஒத்த இயற்கை காட்டு வளமும் இங்கு காணப்படுவதுடன் அரசாங்கம் இதனை பாதுகாத்து வருகின்றது.

சோகம தோட்ட மக்கள் தற்போதும் தங்கள் ஆலயத்தில் திருவிழாக்கள் நடக்கும் சந்தர்ப்பத்தில் இந்த நீர் ஊற்றில் நீர் எடுத்து கரகம் பாலித்து திருவிழாக்களை நடாத்தி வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து இந்த இடத்தில் அம்மனை வைத்து ஊற்று மாரியம்மன் என்ற பெயரில் ஆலயம் அமைத்து வணங்கி வருகின்றனர்.

இந்த ஆலயத்தை இப்பிரதேசத்தைச் சேர்ந்த ஆலய தர்மகர்த்தா கிருஸ்ணபிள்ளை வேலுராமன் அய்யா அவர்கள் மிகவும் அர்ப்பணிப்புடன் நடாத்தி பக்தர்களுக்கு சேவை செய்து வருகின்றார்.

இவரின் முயற்சியினாலேயே இந்த ஆலயம் உறுவாகியுள்ளது. இவருக்கு இவரது மகள்மார்கள் மிகவும் உதவியாக இருக்கின்றார்கள்.

இந்த ஆலயத்திற்கு இன மத பேதம் இன்றி அனைத்து மக்களும் வந்து வணங்கி செல்கின்றனர்.

பக்தர்கள் தாங்கள் கேட்கும் அனைத்தையும் அம்மன் வழங்கி வருகின்றாள். பிள்ளைபேறு, செய் சூனியம், நினைத்த காரியங்கள் நிறைவேற்றல்ச கூடிய விரைவில் திருமணம்ச தோசம் கழிதல்ச தீராத நோய் பிணி தீர்த்தல், நினைத்த காரியம் நிறைவேற்றல் இவை அனைத்தும் நிறைவேறி வருகின்றன.

தற்போது உலக சைவ திருச்சபையின் தலைவர் கலாநிதி அடியார் விபுலாநந்தா தலைவரின் ஏற்பாட்டில் ஊற்றுலிங்கேஸ்வரர் சிவலிங்கம் ஒன்றும் பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ளது. தனியாக இருந்து மக்களுக்கு அருள் பாலித்து வந்த ஊற்று மாரியம்மன் ஊற்றுலிங்கேஸ்வரருடன் இணைந்து அருள் பாலித்து வருகின்றாள். பக்தர்கள் ஊற்று நீரை எடுத்து சிவனுக்கு தாங்கலாகவே ஊற்றி வழிபட்டு வருகின்றனர். பிரதோஷ விரதம் மற்றும் பிதிர் கடன்களை இங்கு நிறைவேற்றி வருகின்றனர்.

## இலங்கையின் அதிசயம்

இலங்கையில் உள்ள நுவரெலியா பிரதேசம் ‘சிறிய இங்கிலாந்து' (Little England) என்று அழைக்கப்படுகிறது.

உலகின் மிகப்பெரிய நிலப் பாலூட்டியான யானையையும், மிகப்பெரிய கடல் பாலூட்டியான நீல திமிங்கலத்தையும் ஒரே நாளில் காணக்கூடிய ஒரே நாடு இலங்கை .

உலகின் பழைமையான மனிதனால் நடப்பட்ட மரத்தின் தாயகம் இலங்கையாகும். (ஸ்ரீ மகா போதி)


சிங்கக் கொடி என்றும் அறியப்படும் இலங்கையின் தேசியக் கொடியில் பல்வேறு கருத்துக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

உலகில் முதன் முதலில் பெண் பிரதமரைக் கொண்ட நாடு இலங்கையாகும்.










# கவிஞர் அலறியின் துளி அல்லது துகள்

***It is a test (that) genuine poetry can communicate before it is understoodT.S.Eliot.***



நவீன கவிதைப்பிரதிகளுடன் உறவாடும் வாசகர் பலரும் முன்வைக்கும் ஒரு குற்றச்சாட்டு புரியாமை. ஆனால் கவிதை என்பது கட்டாயம் புரிய வேண்டும் என்பதில்லை. ஒரு நல்ல கவிதை என்பது புரிவதற்கு முன்னராகவே வாசகனுடன் பேசமுடியும் அல்லது ஒரு தொடர்பு கொள்ளலை மேற்கொள்ள முடியும். ஆனால் இது வெறுமனே கூறி விட்டு கடப்பதல்ல மாறாக நல்ல கவிதைகள் மூலம் இந்த மேற்கோளானது பரிசோதிக்கப்படல் வேண்டும்.

“எலியட்டின் மேற்கோளுடனேயே கவிஞர் அலறி அவர்களுடைய **துளி அல்லது துகள்** குறித்தான எனது வாசகர் குறிப்பினை பகர விழைகிறேன்.

துளி அல்லது துகள். இந்த கவிதை நூலின் தலைப்பே இருமையுடனானதாய் உள்ளது. நவீன கவிதைகட்கும் இருமைகட்குமான தொடர்பு பற்றி யாவரும் அறிவர். துளி என்பது திரவமாக இருக்கையில் துகள் என்பது திடத்தின் ஒடுங்கிய உருவாக துணிக்கையாக இருக்கிறது. ஆனால் துளியின் கூறாக இருப்பதுவும் துணிக்கைகள் அல்லது துகள்களே. இவ்வாறு தனித்தும் ஒன்றித்துமான இருமை நிலைகளில் சடப்பொருள்களின் இருப்பினை போன்றதே இவரின் கவிதைகள்.

நூலிற்குரிய தலைப்பு கவிதையினை உசாவுகையில் யார் பெரியவர் என்பதை அறிய திருமாலும் பிரமனும் அடி முடி தேடிய இந்து மதத்தின் தொன்மமே என் நினைவுக்கு வந்தது. இந்த கவிதையில் இயற்கையில் பெரிதான விடயங்களை எல்லாம் அடுக்கிக் கொண்டே செல்கிறார் கவிஞர். கடல், பாலை, காடு, வானம் என பெரிதின் தேடல் நீள்கிறது. ஆனால் கவிதையின் அந்தம் அல்லது முடிவிடம் இவ்வாறுள்ளது.

மாகடலும், விரிபாலையும், பெருங்காடும், நெடுவானும் ஐம்பூதங்களும் அண்டத்தில் துளி அல்லது துகள்

இயற்கையின் ஆகப்பெரிதான கூறுகள் யாவுமே எல்லையற்று விரிகின்ற அண்டத்திலே துளி அல்லது துகள் என்கிறார் கவிஞர். பெரிதென நாம் கருதும் யாவற்றையும் ஒடுக்கி, சுருக்கி அண்டத்தை முடிவற்றதாக்குகிறார். கவிதையின் ஆழ்த்துள் உறைந்து செல்கையில் ஆன்மிகத்தின் சாரல் பொழிகிறது. யாவற்றையும் சிறு துகள்கள் அல்லது துளிகளாக்கிய பேரண்டமே யாவற்றையும் கடந்து நிற்கும் ஏதோவொன்று. ஆனால் கட்புலனாவதில்லை வெற்றுக் கண்கட்கு.

**பட்சிகளின் இராச்சியம்.**

“காக்கை’, கிளிகள் நம்மினம்” எனப்பாடிய பாரதியின் வழித்தோன்றல்கள் போலும் கவிஞர்கள். இந்த தொகுப்பிலும் பல்வேறு பறவைகள் அல்லது பட்சிகளை அறிமுகம் செய்கிறார் கவிஞர்.

தொகுப்பின் வாயிலிலேயே தங்கியிருக்கிறது குளிர்ப் பறவை. கவிதையை வாசிக்கையில் கவிஞர் உருவகமாக கூறவருவது பெண்ணையா அல்லது நிஜப்பறவை ஒன்றையா என்ற மயக்கம் வருகிறது. கவிதையின் ஆரம்பம் தொடக்கம் முடிவு வரைக்கும் நீடிக்கும் இந்த குழப்பத்தினிடையே வாசகனின் மனதைவிட்டு நீங்கி விடுகிறது பறவை இங்ஙனம்.

“கதவுகள் மெல்ல விரிய
வெட்கம் கூடி வெளியேறி விடுகிறது
உஷ்ணமாக”

கவிதையில் ஆரம்பத்தில் குளிர்மையினை அறிமுகம் செய்து இறுதி வரிகளில் உஷ்ணத்தை விதைத்து விடுகிறார் அதன் பறப்பு திசைகளில் கவிஞர்.

குலவுகை, கும்மிருட்டு, குறுகுறுப்பு. இந்த சொற்களின் தேர்ச்சியினால் வாசிக்கும் வாசகனின் மனதிலும் கூட ஒருவகையான கிளர்ச்சியை உருவாக்கிவிடுகிறது கவிதை.கவிதை முழுவதிலும் சொற்களிலான சம்போகம் விரிந்து கிடக்கிறது. ஆனால் யாருடன் சம்போகம் நிகழ்கிறதென்பது ஒரு மாயமாகவே உள்ளது. கடைசிவரைக்கும் அது கூறப்படவேயில்லை. இந்த கவிதையின் செதுக்கலும் நுட்பமும் வாசகனை பிரதிக்குள் வேகமாக அழைத்துச்செல்கிறது.

“ஒரு செறங்கை பேரிச்சம் பழத்தில்” வாசகன் தரிசிக்கும் நெற்குருவியின் துயரம் இவ்வாறிருக்கிறது.

“நோன்பிருக்கிறாய்
பசித்திருக்கிறாய்”

இந்த கவிதை ஆரம்பகாலத்தில் இஸ்லாமிய சமூகத்தில் காணப்பட்ட யதார்த்த போக்குகளில் இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் மாற்றங்களை கண்டு வேதனையுறும் கவிஞனின் மனதாகவே தோன்றுகிறது.

தொன்மங்களின் வார்ப்புக்களாக இருந்த “பக்கீர் பாவாக்களின் ரபான், ஸலவாத் சப்தம், மினராக்களின் சோடிப் புறாக்கள்” என்பன அற்றுப் போய் , இன்றைய நாள்களில் “பள்ளிகளில் பனிப்புகார் படர்ந்திருப்பதாக” வலியுடன் கூறுகிறது கவிதை. ஒரு சமூகத்தில் வலிந்து திணிக்கப்பட்ட முறைமைகளை தன் வரிகளில் கொணர்ந்த கவிஞரின் சமூகம் மீதான அக்கறை கவனிப்புக்குரியது.

சூழலியல் குறித்த கவிஞரின் அக்கறையினை பட்டவர்த்தனமாக தாங்கி பறக்கிறது “அந்தப்புரப் பறவை/நித்தியப்பறவை”. சிறையுடைத்து பறக்கும் பறவையின் கண்களில் காலமாற்றத்தின் கோலமாய் சிக்கவில்லை பச்சையங்கள். அதன் கண்களில் தெரிபவை யாவுமே பாலைவெளிகளும், பாழ் நிலங்களும். ஊன் உறக்கமுற்று தேடிய தேட்டத்தின் நிமித்தம் அது சுவனத்தை அடைகிறது. இதில் வரும் நித்தியம் என்ற பதம் பறவை நிரந்தரமாக ஓய்வுற்றதையே குறியீடாக குறிக்கிறது.

**காலத்தை கூறும் கவிதைகளின் அரசியல்**

நடப்பு விடயங்கள் குறித்து பேசாத பிரதிகள் எதுவும் பிரதிகளில்ல. வெறுமனே வார்த்தை கோர்வைகளையும் கற்பனைகளையும் கூறுவன மட்டும் அவைகள் பிரதிகளாவதுமில்லை. அலறி என்ற கவிதை சொல்லியின் இந்த நூலிலும் நாம் வாழுகின்ற காலத்தை கச்சிதமாக கூறும் அரசியல் கவிதைகள் பலவற்றையும் காணக்கிடைக்கிறது.

“சிவப்பில் நட்சத்திரங்கள் மின்னும்
பட்டாடை விரித்து பாடிக் கொண்டிருக்கிறாள்
சீனத்துப் பெண்
அவள் பாடலில்
தாழம்பூ வாசம்
பாம்பின் படம்”

இவ்வாறு தொடங்கி தொடர்கிறது சீனத்துப் பெண் வல்லாதிக்கம் என்ற கவிதை. இந்த கவிதையிலே சீனாவை ஒரு பெண்ணாக உருவகித்து, அவளின் வீச்சில் உலகமே அடங்கிக் கிடப்பதாக கவிதையின் சுழற்சி நகர்கிறது. அதாவது சீனாவின் வல்லமை மற்றும் ஆக்கிரமிப்புவாதமே இந்த கவிதையின் பேசுபொருளாகிறது. கவிதைசொல்லியின் சொற்களில் மிதக்கிறது நாம் எதிர்கொள்ளும் யதார்த்தம். ஆனால் அதற்காக ஒரு பெண்ணை தேர்வு செய்திருப்பதை இரு வகையாக நோக்கலாம்.

* ஒன்று கவிதை சொல்லி ஆணாகையால் பெண்கள் குறித்தான அவரின் மேலாண்மைவாதம்.

* மற்றையது பெண்களை மென்மைக்கு வர்ணிக்கும் பிரதிகளின் தேர்வுக்கு மாற்றாக அவர்களின் பாத்திரத்தை நிறுவுவது. எவ்வாறாயினும் இந்த இரு உத்திகளுமே ஏனைய கவிதை சொல்லிகளினாலும் பாவிக்கப்பட்டு புழக்கத்தில் இருப்பவை தான்.

“ஈஸ்டர்/2019.04.21/கல்லெறி” என்ற கவிதை நாட்டில் இடம்பெற்ற துயரசம்பவம் ஒன்றிற்கான கவிதை சொல்லியின் எதிரொலிப்பு. தீவிரவாதத்தின் கல்லெறிதலின் விளைவாக என்னவானது இந்த தேசம்?

“இதிகாசம் , வேதங்கள், இதயங்களிலும்
இருள் கவ்விய
இவ் ஓராண்டு இடைவெளியில்
இனங்களுக்கிடையில்
நாலாயிரம் வன்மம்
நாற்பதடிச் சுவர்”

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியிலான கவிதை சொல்லியின் யதார்த்த வரிகள் இவை இதயங்களில் இருள் கவ்வுதல் சரி. புரதான இதிகாசங்களிலும் வேதங்களிலும் இருள் கவ்வுதல் எங்ஙனம்?

உண்மையில் இதிகாசங்களும் வேதங்களும் உரைக்கப்பட்டவாறு நடைமுறையில் இல்லை. காலத்துக்கு காலம் பல்வேறு சமய அறிஞர்களால் , மாறுபாடான பொருள்கோடல்களை வழங்கியுள்ளனர். இந்த பொருள் கோடல்களை பின்பற்றுவோர் அதன்மீது அதீத நம்பிக்கை கொள்கையில் ஏனைய மதங்கள் மீதும் மனிதர்கள் மீதும் வன்மம் கொள்கின்றனர். இதனையே கவிதை சொல்லி “இருள் கவ்வுதலாக” குறியீட்டு நிலையில் கூறுகிறார்.

**முடிவாக**

ஒரு தொகுதியின் எல்லா கவிதைகளின் மீதும் விமர்சன நோக்கினை முன்வைக்க முடியாது. கிழக்கின் ஒரு முன்னணி கவிதை சொல்லியாக இருக்கும் அலறி யின் கவிதைகளில் ஒரு சிலவற்றை மட்டுமே தேர்ந் தெடுத்து அவற்றின் மீதான எனது குறுக்குவெட்டு பார் வையினையே நான் முன்வைத்தேன். தொகுப்பில் உள்ள கவிதைகள் பல்வேறுவிதமான கருப்பொருள்களை தம்முள்ளே பேசுகின்றன. தொடர்ச்சியாக எழுதி வரும் அலறி அவர்களின் கவிதைகள் நவீன கவிதைகளுக்கான வெளியில் தமக்கான ஒரு பாதையை தேர்வுசெய்து பயணிக்கின்றன. அதனை உறுதிசெய்கின்றன இந்த தொகுதியில் உள்ள கவிதைகள்.

**- திருஞானசம்பந்தன் லலிதகோபன் -**

# புதிய அலையில் நனைய இணைவோம்

கலைக் கதிர்



ஊழற் புயலடித்த தேசத்தின்
கறைபடிந்த சாலைகளை
கண்ணீர் புகையாலும்
நீர்த்தாரைகளாலும்
கழற்றுதல் இயலுமோ?

ஒரே இரத்தம்,ஒரே வியர்வை
ஒரே இலக்கு, கறைகளைக் கழுவும்
மக்கள் எழுச்சியின்
அழியாத்தடங்களை
வரலாறு எழுதுகிறது
கடல்சூழ் தீவுக்குள் புதிய அலை
சந்ததிகளின் எதிர்காலம் பற்றிய
அச்சம் கலைகிறது மெல்ல மெல்ல
ஒருநாளும் கிரகணங்கள் நீடிப்பதில்லை

அரியாசனங்கள் ஆடிப்போக அடித்த
மனித அலையில்
மன்னன் நாமம் மதிப்பிழந்தது
மக்கள் குரல் சூரியக்கதிராய்
சுட்டெரிக்க அதிர்கிறது தேசம் இன்று
எந்த அநீதிக்கான எதிர்த்தலும்
அமைதியாய் உறங்குவதில்லை

இயல்பு நிலை அழித்து
வாழ்வின் சமநிலை கலைத்து
தனிமனித உரிமை பறித்தபின்னும்
சதி புரியும் தலைவர்களே!
எத்தனை முறை செத்துப்பிழைத்தோம்
இன்னுமா சாக நினைப்போம்?

இனம்,மொழி,மதம் கடந்தார். இத்தேச
மக்கள் இனம், மொழி, மதம் கடந்தார்
பொது எதிரி அரசியல் சாக்கடை அதன்
எல்லா முகங்களும்
ஒரே முகமே என எழுதுவோம்
எல்லா மக்களுக்குமான
புதுமுகம் தேடுவோம்.

நாங்கள் இந்த நாட்டின்
வாக்களித்த அப்பாவிகள்
நம்பி மோசம்போன ஏமாளிகள்

மக்கள் துயருறும் நாட்டில்
தலைவனுக்கேன் சிம்மாசனம்?
அதற்கேன் ஒரு அரசாங்கம்?

பாலையூற்று அஷ்ரபா நூர்தீன்

# இந்தியாவின் முதல் பொதுநிலைப் புனிதராகிறார் தமிழ் மண்ணின் மைந்தரான தேவசகாயம்பிள்ளை

## இன்று வத்திக்கானில் திருத்தந்தை பிரான்சிஸ் அறிவிக்கிறார்




- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்; இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)

இந்தியாவின் முதல் பொதுநிலை புனிதர் - தமிழகத்தின் முதல் தமிழ் புனிதர் - குமரிமாவட்ட மண்ணின் மைந்தன் எனப் பல பெருமைகளைத் தனதாக்கிக் கொள்ளும் அருளாளர் தேவசகாயம்பிள்ளை உட்பட பத்து அருளாளர்களை 15 மே 2022 பாஸ்கா காலத்தின் 5ஆம் ஞாயிறன்று - இன்று இலங்கை நேரம் பகல் 01.30 மணிக்கு - வத்திக்கானின் புனித பேதுறு வளாகத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நிறைவேற்றும் திருப்பலியில் புனிதர்களாக அறிவிக்கப்படுகிறார்கள்.

இன்றுவரை தமிழகத்தில் யாருக்கும் புனிதர் பட்டம் வழங்கப்படாத நிலையில் வத்திக்கானின் புனித பேதுறு வளாகத்தில் நடைபெறும் மேற்படி விழாவில் கலந்து கொள்ள கோட்டாறு மறைமாவட்ட ஆயர் மேதகு நசரேன் சூசை ஆண்டகை உட்பட இந்தியப் பேராயர்கள், ஆயர்கள் மற்றும் மத்திய அரசின் சார்பில் சிறுபான்மையினர்




நலத்துறை இணை மந்திரி ஜான்பார்லா, தமிழக அரசின் சார்பில் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ், வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான், சிறுபான்மையினர் ஆணைய தலைவர் பீட்டர் அல்போன்ஸ் எனப் பலர் ரோம் நகருக்கு வந்துள்ளனர்.

### தேவசகாயம்பிள்ளை கொல்லப்பட்ட இடமான ஆரல்வாய்மொழி காற்றாடி மலையில் திருப்பலி

தேவசகாயம்பிள்ளை கொல்லப்பட்ட இடமான ஆரல்வாய்மொழி காற்றாடி மலையில் மிகப்பெரிய ஆடம்பர திருப்பலி 05 ஜூன் 2022 அன்று நடைபெற உள்ளது. அதற்காக மிகப்பெரிய அளவிலான பந்தல் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் சுமார் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

'தெற்கில் விழுந்த விதை' என்ற தேவசகாய வரலாற்று நூலை நீண்டகால களஆய்வுக்குப்பின் எழுதினார் கவிஞர் குமரி ஆதவன். தேவசகாயம்பிள்ளை பிறந்த மண்ணுக்கு அருகேயுள்ள கிராமத்தைச் சேர்ந்தவர். இவர் எழுதிய நூல்கள் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்குப் பாடமாகவும் வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் கன்னியாகுமரி மாவட்டத்தில் நட்டாலம் என்ற ஊரில் 1712ஆம் ஆண்டு ஏப்ரல் 23ஆம் திகதி அருளாளர் தேவசகாயம் அவர்கள் பிறந்தார். 1741இல் குளச்சல் துறைமுகத்தைப் பிடிக்க வந்த டச்சு படைகள் மார்த்தாண்ட வர்மாவின் படைகளால் தோற்கடிக்கப்பட்டன. டச்சு படைத்தலைவரான கத்தோலிக்க மதத்தைச் சார்ந்த பெனடிக்டுஸ் தே டிலனாய் அவருடைய படைகளுடன் சிறைப்பிடிக்கப்பட்டார். பின்னர் டிலன்னாயை தமது படையின் ஆலோசகராக மார்த்தாண்ட வர்மா நியமித்தமையால் அவர் நீலகண்ட பிள்ளையின் நண்பரானார்.

ஒருநாள் நீலகண்ட பிள்ளை மிகுந்த கவலையில் இருந்தமையைக் கண்ட டிலன்னாய் அதற்கான காரணத்தைக் கேட்டார். அப்போது திருவிவிலியத்தில் உள்ள யோபுவின் கதையை டிலன்னாய் சொல்லி நீலகண்டனுக்கு கிறிஸ்தவ சமயத்தை அறிமுகம் செய்து வைத்தார். தொடர்ந்து இயேசு கிறிஸ்துவைப் பற்றி அவரிடம் கேட்டு தெரிந்துகொண்ட நீலகண்டன் நாளடைவில் திருமுழுக்குப் பெற்று கிறிஸ்தவராக விருப்பம் கொண்டார்.

திருநெல்வேலி மாவட்டத்தின் வடக்கன்குளம் கத்தோலிக்க தேவாலயத்தின் பங்குத் தந்தையாகப் பணிபுரிந்த ஜோவான்னி பத்தீஸ்தா புத்தாரி நீலகண்ட பிள்ளைக்குத் திருமுழுக்கு வழங்கி இலாசர் என்பதற்கு நிகரான தேவசகாயம் என்னும் பெயரைச் சூட்டினார். இவரது மனைவி இலந்தவிளை அருகே உள்ள குஞ்சு வீட்டு நாயர் சமுதாயத்தை சார்த்த பார்கவி அம்மாள் ஆவார். அவரும் ஞானப்பூ எனும் பெயருடன் திருமுழுக்கு பெற்று கத்தோலிக்கர் ஆனார்.

### தேவசகாயம்பிள்ளை செபித்த பாறையின் மீது அவரின் முழங்கால், முழங்கையின் தடயங்கள்

தேவசகாயம்பிள்ளை என்ற பெயருடன் கிறிஸ்தவரான நீலகண்டன் கடவுள் முன்னிலையில் மனிதர்கள் அனைவரும் சமம் என்ற உண்மையை நிலைநாட்ட பெரிதும் விரும்பினார். நீலகண்டன் என்கிற தேவசகாயம் உயர் வகுப்பைச் சேர்ந்தவராகவும் அரச அதிகாரியாகவும் இருந்தமையால் அவர் கிறிஸ்தவராக மாறியதை மன்னர் விரும்பவில்லை என்று கூறப்படுகிறது. தமது மனதை மாற்றிக் கொள்ளுமாறு மன்னர் விடுத்த அழைப்பை தேவசகாயம் பிள்ளை முழுமனதோடு நிராகரித்தார். இதனால் ஆத்திரமடைந்த மன்னர் மார்த்தாண்ட வர்மா தேவசகாயத்தை சிறையில் அடைக்குமாறு ஆணையிட்டார்.

தேவசகாயம்பிள்ளை பாறையின் மீது செபித்த போது அதன் மீது அவரின் முழங்கால் மற்றும் முழங்கையின் தடயங்கள் பதிந்தன என நம்பப்படுகின்றது.

பல மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்ட பிறகும் தேவசகாயம் கிறிஸ்தவ நம்பிக்கையில் உறுதியாக இருந்தார். இதனால் நம்பிக்கை இழந்த மன்னர் தேவசகாயத்தின் கீழ்ப்படியாமையை அரசத் துரோகமாக கருதி அவ



ருக்கு மரண தண்டனை விதித்தார். இதையடுத்து கழுத்தில் எருக்கலம் பூ மாலை அணிவிக்கப்பட்டு எருமை மாட்டின் மீது பின்னோக்கி அமர வைத்து அவரை ஊர் ஊராக அழைத்துச் சென்றார்கள்.

தேவசகாயம்பிள்ளை சென்ற இடங்களில் எல்லாம் அவரிடம் ஆசி பெறச் சென்ற கிறிஸ்தவர்களுக்கு அற்புதங்கள் நிகழ்ந்தன எனக் கூறப்படுகிறது. அவரைக் கட்டி வைத்திருந்த பட்டுப்போன வேப்பமரம் ஒன்று மீண்டும் தளிர்த்து வளர்ந்ததாகவும் வரலாறு பதிவு செய்கிறது. இதன் காரணமாக தேவசகாயம்பிள்ளையின் புகழ் மக்களிடையே வேகமாக பரவியது. ஆகவே அவரை இரகசியமாகக் கொலை செய்து விடுமாறு மன்னரிடம் இருந்து கட்டளை வந்தது.

மக்கள் அனைவரும் பொங்கல் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்த வேளையில் 1752 ஜனவரி 14ஆம் திகதி குமரி மாவட்டம் ஆரல்வாய்மொழியில் உள்ள காற்றாடி மலையில் தேவசகாயம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தேவசகாயம் பிள்ளையின் உடலை காட்டிலேயே எரித்து தீ வைத்துவிட்டுச் சென்றனர் மன்னரின் படைவீரர்கள். சில நாள்களுக்குப் பிறகு இதுகுறித்து அறிந்த அப்பகுதி கத்தோலிக்கர்கள் தேவசகாயம்பிள்ளையின் உடல் பகுதிகளை எடுத்துச் சென்று நாகர்கோவிலில் உள்ள கோட்டாறு புனித சவேரியார் ஆலய வளாகத்தில் அடக்கம் செய்தனர்.

அவரை மறைசாட்சியாக கருதியமையாலேயே ஆலய வளாகத்தில் அவருக்குக் கல்லறை அமைக்கப்பட்டது. அப்பொழுது கொச்சி மறைமாவட்டத்தின் ஆயராக இருந்த கிளெமென்சு யோசப் நமக்கொரு மறைசாட்சி கிடைத்து விட்டார் என்று கூறி சிறப்பு வழிபாடு நடத்தினார் எனக் குறிப்புகள் உள்ளன.

தேவசகாயம்பிள்ளையின் கல்லறையில் செபித்ததால் பல்வேறு அற்புதங்கள் நிகழ்ந்தன எனக் குமரி மாவட்ட மக்கள் கத்தோலிக்க திருச்சபை அதிகாரிகளுக்கு தெரிவித்தனர். இதையடுத்து, கிறிஸ்தவ நம்பிக்கையின் பொருட்டே தேவசகாயம்பிள்ளை கொல்லப்பட்டார் என்




னும் செய்தி அடங்கிய அறிக்கையை அப்போது கொச்சி ஆயராக இருந்த கிளெமென்சு யோசப் 1756இல் ரோமில் திருத்தந் தையிடம் கையளித்தார். இலத்தீன் மொழியில் எழுதப்பட்ட அந்த அறிக்கையும் அதன் ஆங்கில, தமிழ் மொழி பெயர்ப்புகளும் உள்ளன.

அப்பொழுது, மறைசாட்சி கட்டுண்டிருந்த சங்கிலியும் ரோமுக்கு கொண்டு செல்லப்பட்டதாக தெரிகிறது. இதுவே, அவரை புனிதராக உயர்த்துவதற்கான முதல் முயற்சியாகக் கருதப்படுகிறது.

அருளாளர் தேவசகாயம்பிள்ளை இறந்த இடம் இன்று தேவசகாயம் மவுண்ட் என்றும் ஆரல் குருசடி என்றும் அழைக்கப்படுகிறது. கத்தோலிக்க திருச்சபை இவருக்கு அருளாளர் பட்டம் வழங்கி சிறப்பித்துள்ளது.

### 240 ஆண்டுகளுக்குப் பின்னர் புனிதர் பட்டம் அளிக்க முயற்சி

இருநூற்று நாற்பது ஆண்டுகள் இடைவெளிக்கு பிறகு 1993ஆம் ஆண்டில் தேவசகாயம் பிள்ளைக்குப் புனிதர் பட்டம் அளிக்க முயற்சி மேற்கொள்வது பொருத்தம் என்று கருதி அதற்கான நடவடிக்கைகளைக் கோட்டாறு மறைமாவட்ட ஆயர் லியோன் தர்மராஜ் மீண்டும் தொடங்கினார்.


2012 ஜூன் மாதத்தில் திருத்தந்தை பதினாராம் பெனடிக்ட் தேவசகாயம் பிள்ளை உறுதியான விசுவாச வாழ்வு வாழ்ந்தார் என அறிக்கையிடும் புனிதர் பட்ட நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் பேராயத்தின் ஆவணத்தில் கையொப்பம் இட்டு இவரை வணக்கத்திற்குரியவர் நிலைக்கு உயர்த்தினார். தேவசகாயம் பிள்ளையின் மறைசாட்சிய வாழ்வின் அடிப்படையில் அவருக்கு அருளாளர் பட்டம் வழங்கவும் ஒப்புதல் வழங்கினார். இதையடுத்து நாகர்கோவில் கார்மேல் மேனிலைப் பள்ளி வளாகத்தில் 2012 டிசெம்பர் 2ஆம் திகதி நடைபெற்ற விழாவில் தேவசகாயம் பிள்ளையை அருளாளராக உயர்த்தும் அறிவிப்பை திருத்தந்தையின் பிரதிநிதியான கர்தினால் ஆஞ்செலோ அமாத்தோ வெளியிட்டார்.

மறைசாட்சி அருளாளர் தேவசகாயம் பிள்ளை அவர்களின் கல்லறை கோட்டாறு மறைமாவட்ட சவேரியார் முதன்மைக் கோவிலில் உள்ளது. 2012ஆம் ஆண்டு டிசெம்பர் 2ஆம் திகதி இவர் அருளாளர் என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டார். இவரை அதிகாரப்பூர்வமாகப் புனிதராக அறிவிப்பதற்கு வழியமைக்கும் இவரின் பரிந்துரையால் நடைபெற்ற புதுமையை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 21 பெப்ரவரி 2020ஆம் அங்கீகரித்தார்.



- முருகபூபதி -

# கதைசொல்லிக் கலைஞர் மாஸ்டர் சிவலிங்கம் மறைந்தார்



மகாபாரதக் கதையை வியாசர் முதல் ஜெயமோகன் வரையில் பலரும் எழுதியிருக்கின்றனர். ஜெயமோகன் 'வெண்முரசு' என்னும் தலைப்பில் ஆயிரக்கணக்கான பக்கங்களில் தொடர்ந்து எழுதினார்.

2014 ஆம் ஆண்டில் விஷ்ணுபுரம் விருது விழா முடிந்து வீடு திரும்பியதும், தனது குழந்தைகளுக்கு மகாபாரதக் கதையைச் சொல்லி, அதில் வரும் பாத்திரங்களின் இயல்புகளையும் விவரித்திருக்கிறார்.

அவர் கதைசொல்லும் பாங்கினால் உற்சாகமடைந்த அவரது குழந்தைகள், அப்பா, இந்தக் கதையையே இனி எழுதுங்கள். என்று வேண்டுகோள் விடுத்ததும், அவர் அன்றைய தினமே மகாபாரதக் கதைக்கு 'வெண்முரசு' என்று தலைப்பிட்டு ஒவ்வொரு பாகமும் சுமார் 500 பக்கங்கள் கொண்டிருக்கத்தக்கனவாக எழுதினார்.

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரையில் விரும்பிய காவியம்தான் மகா பாரதம்.


இலங்கையில் ஒரு காலகட்டத்தில் மாணவர்களுக்கும் குழந்தைகளுக்கும் மகா பாரதக்கதையைச் சொல்லிக் கொண்டிருந்த இரத்தினம் சிவலிங்கம் என்ற இயற்பெயர் கொண்ட மாஸ்டர் சிவலிங்கம் அவர்கள் கடந்த 11 ஆம் திகதி மறைந்துவிட்டார் என்ற துயரச்செய்தி எம்மை வந்தடைந்தபோது மகாபாரதம் தான் மனக்கண்ணில் தோன்றியது.

இறுதியாக அவரை கடந்த 2019 ஆம் ஆண்டு எழுத்தாளர் செங்கதிரோன் கோபாலகிருஷ்ணனுடன் சென்று பார்த்தேன். அச்சமயம் அவர் சிறுநீரக உபாதையினால் சிகிச்சைக்குட்பட்டிருந்தார்.

தொடர்ந்தும் அவரை வருத்த விரும்பாத காலன் தற்போது அவரை கவர்ந்து சென்று, நிரந்தர ஓய்வு கொடுத்து விட்டான்.

கிழக்கு மாகாணத்தின் கலை இலக்கியப் பாரம்பரியத்திற்கு நீண்ட நெடிய வரலாறு இருக்கிறது. யாழ்நூல் தந்த சுவாமி விபுலாநந்தருக்கு முற்பட்ட காலத்திலிருந்தே அந்த வரலாறு எழுதப்பட்டிருக்கிறது.

இசை, கூத்து, கல்வி, நாடகம், இலக்கியம், இதழியல் உட்படப் பல்வேறு துறைகளில் சாதனைகள் புரிந்தவர்கள் தோன்றிய மட்டக்களப்பில் மஞ்சந்தொடுவாயில் 1933 இல் பிறந்திருக்கும் மாஸ்டர் சிவலிங்கம் தமது 89 வயதில் வயது மூப்பின் காரணமாக மறைந்துள்ளார்.




ஏறக்குறைய அரைநூற்றாண்டு காலமாக சிறுவர்களுக்கு கதைசொல்லும் கலைஞராகத் திகழ்ந்தவர். கவிதை, நாடகம், சிறுவர் இலக்கியம், வில்லுப்பாட்டு, நகைச்சுவை உரைச்சித்திரம் முதலான துறைகளில் பிரகாசித்தவர். அதற்காக பல விருதுகளும் பெற்றவர். சென்னைக் கலைக் கல்லூரியில் கேலிச்சித்திரத் துறையிலும் பயின்றிருப்பவர்.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, பண்டிதமணி வீ. சீ. கந்தையா, கிருபானந்த வாரியார், செல்லையா இராசதுரை ஆகியோரிடத்திலும் கொழும்பு தமிழ்ச்சங்கம், மட்டக்களப்பு இந்து சமய அபிவிருத்திச்சங்கம் ஆகிய அமைப்புகளிடத்திலும் பாராட்டுப் பட்டங்கள் பெற்றவர். இலங்கை கலாசார அமைச்சின் விருது, வடகிழக்கு மாகாண அரசின் சாகித்திய விருது, மட்டக்களப்பு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் வழங்கிய தமிழியல் விருது என்பவற்றையும் பெற்றவர்.

ஒரு காலத்தில் இவரது ஆற்றல்களை நன்கு இனங்கண்டு கொண்ட புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை, இவரை இலங்கை வானொலி கலையகத்திற்கு அழைத்துச்சென்று சிறுவர் மலர் நிகழ்ச்சியை தயாரித்து வழங்கும் வானொலி மாமா சரவணமுத்துவிடம் அறிமுகப்படுத்தியிருக்கிறார்.

சிறுவர்களுக்கு நேரில் கதை சொல்லமுடியும். ஆனால், வானொலி ஊடாக சிறுவர்களுக்கு எவ்வாறு கதை சொல்வீர்...? என்று அந்த மாமா இவரிடம் கேட்டதும், அங்கிருந்த மாமாவின் பெரிய டயறியைக் கையில் எடுத்திருக்கிறார் சிவலிங்கம்.

அதனை எதற்கு எடுக்கிறீர்....? மாமா கேட்கிறார்.

இதிலும் கதை இருக்கிறது எனச்சொல்லிவிட்டு, டயறியை கையில் வைத்து விரல்களினால் அதில் வெவ்வேறு ஒலி எழும் வகையில் தட்டியிருக்கிறார்.

குதிரை வேகமாக ஓடுகிறது என்று சொல்லி டயறியில் தட்டி குதிரை ஓடும் ஒலியை எழுப்பியிருக்கிறார். பின்னர் இப்பொழுது குதிரை நடக்கிறது எனச்சொல்லி குதிரையின் மெதுவான நடையையும் அந்த டயறியிலேயே மெதுவாகத் தட்டித்தட்டிக் காண்பித்திருக்கிறார். குதிரையின் கதையையும் சொல்கிறார்.

பல வருடங்களுக்கு முன்னர் இலங்கை வானொலி கலையகத்தில் வானொலி மாமா இவருக்கு நடத்திய நேர்முகத்தேர்வில்தான் எவ்வாறு தெரிவுசெய்யப்பட்டேன் என்பதை இந்த கதைசொல்லிக் கலைஞர் அன்று 2019 இல் நினைவு மறதியின்றி எம்முன்னே அபிநயத்துடன் ஒரு டயறியில் தட்டி குதிரை ஓடும், நடக்கும் ஒலியலைகளை எழுப்பி வியப்பில் ஆழ்த்தினார்.

மாஸ்டர் சிவலிங்கம், வீரகேசரி வாரவெளியீட்டின் சிறுவர் பகுதியில் மாணவர்களுக்காக மகா பாரதக் கதையை 57 வாரங்கள் தொடர்ந்து எழுதியவர். அந்தத் தொடரை பின்னர் மாணவர்கள் விரும்பிப்படிக்கும் வகையில் தனி நூலாக அழகிய வண்ணப்படங்களுடனும் வெளியிட்டிருக்கிறார். இதுவரையில் இந்த நூல் மூன்று பதிப்புகளைக் கண்டுவிட்டது.

**தனித்துவத்துக் கொரு உருவம் மாஸ்டர் - நல்ல**
**தங்குபுகழ்க்கொரு உருவம் மாஸ்டர் - வல்ல**
**இனித்தகதைக் கொருஉருவம் மாஸ்டர் - நீங்கா**
**எளிமைக்கும் பண்புக்கும் மாஸ்டர்.**

**நனிபுனைந்த கதைகளெலாம் நூல்களாக**
**நாம் கண்டு சுவைக்கின்ற நற்பேறுற்றோம்.**
**இனியென்ன, நீங்களும்தான் வாங்கி வாங்கி**
**இனித்தினித்துப் படிப்பதற்கும் இடையூறுண்டோ...?**

- என்று இந்த நூலை வாழ்த்தி வரவேற்றுள்ளார் கவிஞர் திமிலைத்துமிலன். மாணவர்களுக்கும் குழந்தைகளுக்கும் கதைசொல்லும் ஆற்றல் கைவரப்பெற்று விளங்கிய மாஸ்டர் சிவலிங்கம், பயங்கர இரவு, அன்பு தந்த பரிசு, உறைபனித் தாத்தா, சிறுவர் கதை மலர் முதலான நூல்களையும் வரவாக்கியவர்.

ஊடகத்துறையிலும் ஈடுபட்டிருக்கும் மாஸ்டர் சிவலிங்கம் தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளில் துணை ஆசிரியராகவும் பணியாற்றியவர்.

அன்னாரின் ஆத்மாவுக்கு நெஞ்சார்ந்த அஞ்சலி.

# நாட்டில் பணம் அச்சிடப்படாது விட்டால் அரச ஊழியர்களுக்கு சம்பளம் இல்லை!

## புதிய பிரதமர் கைவிரிப்பு



பணத்தை அச்சிடவில்லை என்றால் அரச ஊழியர்களுக்கு ஊதியத்தை செலுத்த முடியாமல் போகும் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

பீ.பீ.சி சிங்கள சேவைக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

பணத்தை அச்சிடுவது எனது கொள்கை இல்லை என்றாலும் பணத்தை அச்சிட நேரிடும். பணத்தை அச்சிடவில்லை என்றால், அரச ஊழியர்களுக்கு ஊதியத்தை வழங்க முடியாது.

மிக உக்கிரமான பொருளாதார நெருக்கடியை நாம் எதிர்நோக்கி வருகின்றோம். ஆங்கிலேயர்கள் மற்றும் ஒல்லாந்தர் ஆட்சிக்காலங்களில் கூட இவ்வாறான பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டிருக்காது என நான் நினைக்கின்றேன்.

இந்த ஆண்டே எமக்கு மிகவும் கடினமான ஆண்டு. அந்நிய செலாவணி இல்லை. அரசாங்கத்துக்கு வருமானம் கிடையாது. அந்நிய செலாவணியுடன் வர்த்தகங்கள் நடக்கவில்லை என்றால், வருமானம் குறையும்.

ரூபா மூலம் கிடைக்கும் வருமானத்தை அதிகரிக்க வேண்டும். அந்நிய செலாவணியுடன் வர்த்தகம் செய்யவில்லை என்றால், வரியை செலுத்த முடியாது. வரி குறைக்கப்பட்டுள்ளது. தொழில் வாய்ப்புகளை இழக்க நேரிடும்.

அந்நிய செலாவணி நெருக்கடியால், ரூபா கிடைக்கும் வருமானமும் கிடைப்பதில்லை. தற்போதைய நிலைமையில் சுமார் 300 கோடி டொலர்கள் வரை தேவைப்படுகிறது.

இதனைப் பெற்றுக்கொள்வதே எமக்கு இருக்கும் முதலாவது சவால். அதனை பெற்றுக்கொள்ளவே நான் தற்போது நடவடிக்கை எடுத்து வருகின்றேன்.

நாட்டில் வரிசைகளை இல்லாமல் செய்ய வேண்டும். சாதாரண இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்த வேண்டும். மக்கள் மூன்று வேளையும் சாப்பிட வழியை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.

நடுத்தர வகுப்பு மக்களை முன்னேற்ற வேண்டும். உழைக்கும் மக்களின் வீடுகளுக்கு சிறந்த பொருளாதாரத்தை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருள்களை கொள்வனவு வரிசையில் நிற்கும் யுகத்தை முடிவுக்கு கொண்டு வர வேண்டும்.

1977 ஆம் ஆண்டு நாங்கள் இப்படியான வரிசை யுகத்தை முடிவுக்கு கொண்டு வந்தோம். திறந்த பொருளாதார கொள்கையை நடைமுறைப்படுத்தினோம். மின்சாரம் இன்றி 2001 ஆம் ஆண்டு எமக்கு இருண்ட யுகமாக இருந்தது.

பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. அவற்றையும் நான் முடிவுக்கு கொண்டு வந்து நாட்டை முன்நோக்கி இட்டுச் சென்றேன். 2015 ஆம் ஆண்டும் நாம் பெரும் பொருளாதார பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிட்டது. பொருளாதார வீழ்ச்சியை தடுக்கும் நடவடிக்கைகளை வெற்றிகரமாக செய்தோம்.

ஈஸ்டர் தாக்குதலுக்கு பின்னரும் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பினோம். அனைத்து சந்தர்ப்பங்களிலும் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டுள்ளோம்.

நான் பிரதமராக பதவியேற்ற காலங்களில் மூன்று வேளையும் மக்களுக்கு சாப்பிடும் வசதியை ஏற்படுத்திக்கொடுத்தேன். சிறப்பாக வாழ வழியை உருவாக்கினேன்.

தொழில் வாய்ப்புகளை உருவாக்கினேன். தற்போது இந்த சவாலை ஏற்று மக்களுக்கு சிறந்த வாழ்க்கை ஏற்படுத்திக்கொடுக்க நான் எதிர்பார்த்துள்ளேன்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவு இல்லாவிட்டாலும் இவற்றை செய்ய முடியும். இங்கிலாந்து பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சிலும் 1939 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் நான்கு உறுப்பினர்களே இருந்தனர். எனினும் பிரதமராக பதவியேற்று போரையும் வென்றார் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

# மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட சந்தேக நபர்களை கைதுசெய்க!

## இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் வலியுறுத்து

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் சந்தேக நபர்களை கைது செய்யுமாறு இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் ஜனாதிபதி மற்றும் பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

காலி முகத்திடலில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்திய குழுவினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளது.

பொலிஸ்மா அதிபர் மற்றும் ஜனாதிபதிக்கு கடிதத்தை கையளித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அச்சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க இதனைக் கூறினார்.

இதேவேளை புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நியமனத்தை ஆசிரியர் சேவை சங்கம் எதிர்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்துக்கு எதிராக நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படும் நிலையிலும் பொது மக்களின் கோரிக்கைகளுக்கு ஜனாதிபதி செவிசாய்க்கவில்லை என மஹிந்த ஜயசிங்க குற்றம் சாட்டினார்.

# நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக்கூடல் ஓராண்டு பூர்த்தி நாளை

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக்கூடல் தனது ஓராண்டு அகவைப் பூர்த்தியை நாளை (திங்கட்கிழமை) வைகாசித் திருநாளில் மெய்நிகர் முறையில் கொண்டாடுகின்றது. கூடலின் இணைத் தலைவர் திரு. இ. இளங்கோவன் செயலர், உள்ளூராட்சி அமைச்சு) தலமையில் திருமதி. சாவித்திரிதேவியின் தேவாரத்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

வரவேற்புரையை கூடலின் இளைஞர்அணி ‘குகனேயர் குழாம்’ உறுப்பினர் கு. சுதரசன்(அபிவிருத்தி உத்தியோகத்தர், மன்னார்) வழங்கவுள்ளார். கூடலின் கடந்த ஓராண்டு செயற்பாடுகளை இணைச்செயலர் த.ஜெயசீலன். (ஆணையாளர்,யாழ். மாநகரசபை) விளக்குவார். இணைச்செயலர் த. சுதர்சன் (பிரதேச செயலர்,யாழ்ப்பாணம்) கூடலின் அடுத்த ஆண்டுக்கான திட்டமுன்மொழிவுகளை சமர்ப்பிப்பார்.

கலாநிதிமனோன்மணி சண்முகதாஸ் சிறப்புரை ஆற்றவுள்ளார்.

நிறைவாக நன்றியுரையுடன் கூடலின் சமயப் பணிப்பாளர் ஜெ. ஹபீசனின் தேவாரத்துடன் விழா நிறைவுறும்.

திகழ்ச்சியில் கலந்து சிறப்பிக்கவிரும்பும் அன்பர்கள் மேற்படி கந்தன் கருணையின் கணக்கில் இணைந்து கொள்ள முடியுமென கூடலின் இணைத்தலைவர் முனைவர் திருநாவுக்கரசு கமலநாதன் அறிவிக்கின்றார்.

# புன்னாலைக் கட்டுவனில் வாள்முனையில் கொள்ளை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மே.14

புன்னாலைக்கட்டுவன் ஊடாக இரவு பயணித்தவரிடம் வாள் முனையில் அச்சுறுத்தி மூவர் வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர்

யாழ்ப்பாணம் சங்கானையில் வசிப்பவர் பலாலி வீதி புன்னாலைக்கட்டுவன் ஊடாக அச்சுவேலிக்கு பயணித்த சமயம் வியாழக்கிழமை இரவு 10 மணியளவில் புன்னாலைக்கட்டுவன் சந்தியை அண்டியபகுதியில் உள்ள பற்றையில் மறைந்திருந்த மூவர் திடீரென வாள்களுடன் வீதிக்கு வந்து வாள்முனையில் அச்சுறுத்தி கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது மோட்டார் வெதுப்பக உற்பத்தி வியாபாரத்தில் ஈடுபடும் 29 வயது இளைஞன் வைத்திருந்த ஒரு லட்சம் ரூபா பெறுமதியிலான கைத் தொலைபேசி மற்றும் 15 ஆயிரம் ரூபா பணம் என்பனவற்றை கொள்ளையிட்டுள்ளனர்.

இதனால் பணம் கைத்தொலைபேசி என்பவற்றை பறிகொடுத்தவர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

இது தொடர்பில் பணம் கைத்தொலைபேசி ஆகியவற்றை பறிகொடுத்தவரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது –

வீதியில் திடீரென வழிமறித்தபோது தகராறின் காரணமாக யாரையோ தேடுகின்றனர் எனது முகத்தை காண்பித்தால் விட்டுவிடுவர் என எண்ணியே மோட்டார் சைக்கிளை நிறுத்தி தலைக்கவசத்தைக் கழட்டினேன் அதன்பின்பே அவர்கள் வழிப்பறிக் கொள்ளையர்கள் என்பதை உணர்ந்தேன். – என்றார்.

## அமெரிக்கத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னணியின் தலைமையகத்தில் அமெரிக்கத் தூதுவருடன் சந்திப்பு இடம்பெற்றது எனவும், நாட்டின் நடப்பு அரசியல் நிலைமைகள் குறித்தும், பொருளாதார நெருக்கடி குறித்தும் இதன்போது கருத்துப் பரிமாறிக் கொள்ளப்பட்டது எனவும் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடிக்கு நிலையான, உள்ளடக்கிய தீர்வுகளை நோக்கி நகரும் இலங்கை அரசின் முயற்சிகளை ஊக்குவிப்பதற்காக நான் பலதரப்பட்ட அரசியல் பிரதிநிதிகளைத் தொடர்ந்து சந்தித்து வருகின்றேன். அந்தவகையில் இலங்கையர்கள் எதிர்கொள்ளும் மிக அவசரமான சவால்கள் குறித்து விவாதிக்க நான் அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்தித்தேன் –என்று அமெரிக்கத் தூதுவர் தனது ருவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## துணுக்காயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குளவிகள் கொட்டியதில் கணவர் உயிரிழந்தார். மனைவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துணுக்காய், ஆலங்குளம் பகுதியை சேர்ந்த ஓய்வு பெற்ற சாரதியான முருகேசு பாலச்சந்திரன் (வயது 72) என்பவரே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தார். அதேநேரம் அவரது மனைவி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய்ப் பகுதியில் உள்ள வீட்டின் பனை மரத்தில் இருந்து இராட்சத குளவிக் கூட்டை நேற்று 2 மணியளவில் பருந்து கொத்தியுள்ளது. இதன்போது குளவிக்கூடு கீழே விழுந்தது. அதிலிருந்து கலைந்த குளவிகள் வீட்டின் வெளியே வேலையில் இருந்த கணவரை மொய்த்துக் கொட்டியுள்ளன. வலியின் காரண மாக கணவர் எழுப்பிய அவலக் குரலைக் கேட்டு விட்டின் உள்ளே இருந்து வெளியே வந்த மனைவி மீதும் குளவிகள் கொட்டியுள்ளன.

இதனையடுத்து அயலவர்களின் உதவியுடன் இருவரும் மல்லாவி வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றபோதும் வைத்தியசாலையில் அனுமதிக்க முன்பே கணவர் உயிரிழந்திருந்தமை உறுதி செய்யப்பட்டது.

## மரத்திலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வீழ்ந்து பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் மானிப்பாய், சங்குவேலி தெற்கைச் சேர்ந்த நாகேந்திரம் நகுலேந்திரன் என்ற 6 பிள்ளைகளின் தந்தையான 48 வயதுடையவரே பரிதாபகரபாக உயிரிழந்தார்.

வீட்டு வளவில் நேற்றைய தினம் மாமரத்தில் 25 அடி உயரத்தில் ஏறி கொப்பு வெட்டும்போது அவர் நின்ற கொப்பு முறிந்ததால் தவறி வீழ்ந்துள்ளார்.

கீழே வீழ்ந்து சுயநினைவற்றுக் காணப்பட்ட அவரை யாழ்ப்பாணம் மருத்துவமனையில் சேர்த்த போதும் ஏற்கனவே அவர் உயிரிழந்து விட்டார் என் மருத்துவ அறிக்கையிடப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் இறப்பு விசாரணைகளை முன்னெடுத்தார்.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# புலம்பெயர் மக்களின் எதிரொலியும் தாக்கமும்



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் -11



**இனக் குரோதங்களும் அவை மறையும் சாத்தியங்களும்**

தங்களது நாடாளுமன்ற இருப்புக்கும் தேர்தலில் தேடவேண்டிய வாக்கு வளங்களுக்கும் இந்த இனக் குரோதங்கள் எல்லா இனத்தவருக்கும் தேவையாக இருந்தன. பேரினவாதம் தனது ஒடுக்குமுறைகளை வெளிக்காட்ட, அதன் பாதிப்புகளுக்கு உள்ளான மற்ற இனத்தவர்களுக்கும் அதனை விட்டால் அரசியல் செய்ய மார்க்கங்களும் தெரியாத நிலையில், அந்தப் பட்டங்களையே அவர்களும் பறக்க விட்டார்கள். அவற்றையே மீண்டும் மீண்டும் பறக்க விடுகிறார்கள்.

மலேசியாவிலிருந்து பிரிந்து சிங்கப்பூர் தனி நாடாகப் பொருளாதாரம் எதுவும் பெரிதாக இல்லாமல், வளங்களும் குறைந்ததாகத்தான் பிறந்தது. அதனைக் கட்டி வளர்த்து, ஒரு பலமிக்க பொருளாதாரமாக மதிக்கப்படும் நாடாக வளர்த்தவர் லீ குவான் யூ. இவற்றில் அவருக்கு உறுதுணையாக இருந்தவர் இராசரத்தினம் என்ற இலங்கை வம்சாவளித் தமிழர்.

இவர்கள் முதலில் அந்த நாட்டைக் கட்டியெழுப்ப அந்த நாட்டின் மக்களை ஒரு தேசமாகக் கட்டி அணைத்தார்கள்.

பெரும்பான்மையில் சீனர்கள் இருந்தும், லீ குவான் யூ சீன இனத்தவராக இருந்தும், அவர் சீனாவின் உதவியோடு சிங்கப்பூரைக் கட்டியெழுப்ப முற்படவில்லை. மலேசியா பக்கத்திலிருந்தும் மலேசிய மக்களை நம்பி இருக்கவில்லை. அதேபோல அடுத்து இந்திய மக்கள் – பெரும்பான்மையில் தமிழர்கள் – இருந்தபோதும் இந்தியாவை நோக்கி கை நீட்டி அவர் உதவிகள் கேட்கவில்லை. சிங்கப்பூரின் பல இனத்தவரையும் இணைத்து உள்ளடக்கி, அவர்களைக் கொண்டே சிங்கப்பூரை நிர்மாணித்தார்.

சுதந்திரம் அடைந்த பொழுது பொருளாதாரத்திலும் வளங்களிலும் எவ்வளவு உச்ச நிலையில் இருந்த இலங்கையோ தேசங்களாக, நாடாக வளர்க்கப்படாமல் இனங்களுக்கிடையே வேற்றுமைகளை ஊட்டி சின்னாபின்னமாக்கப்பட்டது. தங்கள் சுயநலன்களுக்காக சீனாவை நம்பி வளர்ந்தனர். அதற்குத் தாக்குப் பிடிக்க இப்பொழுது இந்தியாவை அழைக்கிறார்கள்.

மக்களைக் கொண்டே இந்த நாட்டை கட்டியெழுப்பக் கூடிய தீர்க்க சிந்தனையுள்ள தலைவர் எந்த இனத்திலும் இருந்துமே எழவில்லை. இனக்குரோதங்களை வளர்த்து, அவற்றைப் பயன்படுத்தித் தங்களை வளர்த்து கொண்டவர்களையே சரித்திரங்கள் காட்டுகின்றன. தந்தை செல்வாவுக்கு தமிழ் மக்களிடையே இருந்த ஆளுமைகளும் அதற்கு சிங்கள மக்கள் தந்த கௌரவமும் மரியாதைகளும் வேறு. தனிப்பட்ட நட்புகளை எல்லோருடனும் அவர் வளர்த்திருந்தார். அவர் போன்ற மனிதர் ஒருவர் ஊடாகவும் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் கண்டு கொள்ள சிங்களப் பேரினவாதம் முன்வரவில்லை. விரும்பவும் இல்லை. அவரது மரணத்தில் சிங்களத் தலைவர்கள் எல்லோரும் அவரைத் தமிழ் மக்களின் ஒப்பற்ற தலைவராகப் போற்றினார்கள்.

சுதந்திரத்துக்கு முன் சேர் பொன் பொன்னம்பலம் இராமநாதனைப் பல்லக்கில் ஏற்றித் தோளில் சுமந்த இலங்கையின் முதல் பிரதமரான டி.எஸ். சேனநாயக்கா பின்னர் அவரைப் புறந்தள்ளி, அதே வழியில் அவர் தம்பி அருணாசலத்தையும் அப்புறப்படுத்தி, பெரும்பான்மையின்–பேரினவாதத்தின்–மேலாண்மை விழுதுகளை ஆழ ஊன்றினார்.

பின்னர் அடங்காத்தமிழர் முன்னணி அமைத்து, தமிழ் ஈழமே தீர்வு என்று பறைசாற்றிய சுந்தரலிங்கத்துக்கு சிங்கள ஆளும் வர்க்கத்தோடு இருந்த தொடர்புகள் ஏராளம். அவரே ஒரு நேரத்தில் தனிச்சிங்கள மந்திரிசபை அமைக்க வழி வகுத்துக் கொடுத்தவர் என்றாலும், பெரும்பான்மை பேரினவாதம் அவரையும் ஒதுக்கியது

அவற்றின் பின்னால் தொடர்ந்து வந்த அடக்குமுறைகளின் கொடூரங்கள் தான் பிரபாகரன் போன்ற இளைஞர்கள் தோன்றி, விடுதலை வீரர்களாக வளர்ந்து, சிங்களப் பெரும்பான்மைக்குச் சிம்ம சொப்பனமாகவும், தமிழ் மக்களிடையே பலத்த ஆளுமைகள் உள்ளவர்களாகவும் மேலெழ வழி செய்தன. அவர்களுடனும் பேரினவாதம் ஏதும் இணக்கம் ஏற்படுத்திக் கொள்ளாது அவர்களை அழிப்பதிலேயே முனைப்பாக நின்றது.

காலி முகத்திடலில் சில நல்லெண்ண சமிக்ஞைகள் எழுந்தாலும், நேர்த்தியாக, காலங்காலமாகக் கட்டமைப்புக்களாக முன்னெடுக்கப்பட்ட இன குரோதங்களை மறந்து போவதற்கான சாத்தியக் கூறுகள் மிகமிகக் குறைவாகவே தோன்றுகின்றன.

மஹிந்த நடத்திய இவ்வளவு அட்டகாசங்களுக்குப் பிறகும், ஜனாதிபதிக்கு முண்டு கொடுத்து, சீவச் சீவத் திரும்பவும் துளிர்க்கும் நரகாசுரன் தலை போல மஹிந்த இப்பொழுது ரணிலின் ரூபத்தில் பிரதமராகி இருக்கிறார்.

இந்த மாற்றங்களில் இனப்பிரச்சினை விடயத்தில் எவ்வகையான கொள்கைகள் கடைபிடிக்கப்படும், அவை முள்ளிவாய்க்காலின் அழுகுரல்களைக் கேட்காது கடந்து போனமை போல போகுமா அல்லது காலிமுகத்திடலில் ஒலித்த கோரிக்கைகள் முட்டாள்தனமானவை என்று ஒதுக்கிவிடப்படுமா என்பவை காலத்தின் கைகளில்தான் உண்டு.

**ரணிலின் மீள் வருகை**

பலருக்கு ஆச்சரியமூட்டும் வகையில், அன்றில் ஆத்திரப்பட வைக்கும் வகையில், சடுதியாக ரணில் பிரதமராகியிருக்கிறார். ரணில் தன்னை மையப்படுத்தி சாணக்கியமாக தனது அரசியலை வளர்த்தவர். கடந்த தேர்தலில் போட்டியிட்ட போது, அவரது பாரம்பரியக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியில் அவருடன் பழையவர்கள் சிலர் மட்டுமே எஞ்சி இருந்தனர். மற்றவர்களில் அனேகமானோர் சஜித் பிரேமதாஸவுடன் வெளியேறி புதிய கட்சியில் போட்டியிட்டனர். தனது தொகுதியிலும் ரணில் வெற்றி பெறவில்லை. ஐக்கிய தேசிய கட்சிக்கு ஓர் ஆசனமும் கிடைக்கவில்லை. நாடு முழுவதிலும் கிடைத்த வாக்குகளின் அடிப்படையில் தேசிய பட்டியலில் ஓர் ஆசனம் கிடைத்தது. அதனை யாருக்கு வழங்குவது என்ற இழுபறிகளால் பல மாதங்கள் அப்பதவி நிரப்பப்படாமல் இருந்தது. இந்தக் காலங்களில் ரணில் அடிக்கடி விருந்துகளுக்கும் சந்திப்புகளுக்கும் மஹிந்தவின் இருப்பிடங்களுக்குப் போய் வந்தார். பின்னர் தேசியப்பட்டியல் ஆசனத்துக்குத் தன்னையே நியமித்து நாடாளுமன்றம் புகுந்தார். அந்தச் சமயத்தில் அவர் 'கோட்டா கோ கம' வரலாம் என்று எதிர்பார்க்கவில்லை.

அந்தச் சந்திப்புகளின் பின்னணியில் ரணில் மூலம் பல மேற்கத்திய அரசியல் தலைவர்களையும் நாடுகளையும் ராஜபக்ஷ சகோதரர்களை ஆதரவாகப் பார்க்கும்படியும், ஐ.நா. மனித உரிமை மன்றம் எடுக்கும் நடவடிக்கைகளை மட்டுப் படுத்தும்படியும் கோரப்பட்டது. நாடு எதிர்கொள்ளவிருக்கும் கடன் பிரச்சினைகள், பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்க வழிகளும் ஆதரவும் தேடுவதும் நோக்கங்களாக இருந்தன.

ரணில் தமது அரசியல் வாழ்விலே பல 'டீல்'களுக்குப் பெயர் போனவர். அவருக்கு இதுவும் ஒரு டீல். இவை போன்றவற்றைப் பற்றித்தான் சாணக்கியன் நாடாளுமன்றத்தில் பேசினார்.

காலிமுகத் திடலிலிருந்து 'கோட்டா கோ ஹோம்' எழுந்து, மஹிந்த பதவி விலகியதும் ஒரே ஓர் ஆசனத்தைக் கொண்ட ரணில், ராஜபக்ஷ சகோதரர்களுக்காக அவர்களின் மொட்டுக் கட்சியில் சவாரி செய்யும் பிரதமராகிறார்.

எதிர்க்கட்சிகள் அவரது நியமனம் ஜனநாயகத்திற்கு எதிரானது என்றும், மஹிந்தவுக்கு மீண்டு கொடுக்கவே அவர் நியமிக்கப்பட்டார் எனவும் குறிப்பிட்டு ஆதரவு தரவில்லை.

ரணிலோ தாம் பதவியேற்றமை ராஜபக்ஷக்களைப் பாதுகாக்கவல்ல, மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை பெறுவதற்கும், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவும் என்று ஊடகங்களுக்குச் செய்தி தருகிறார்.

அவரின் இந்த அணுகுமுறைகளைத் தமிழ் மக்கள் ஆழமாகப் பார்க்க வேண்டும். அது குறித்து நாளை கவனிப்போம்.

(வளரும்)

காலைக்கதிர்
Kalaikkathir

# முள்ளிவாய்க்காலில் நினைவேந்தல் பிரார்த்தனைகளில் தலையிடாதிருக்குமாறு பொலிஸாரை வழிப்படுத்துங்கள்

## பிரதமர் ரணிலுக்கு அவைத் தலைவர் சிவஞானம் கடிதம்



முள்ளிவாய்க்காலில் இடம்பெறவுள்ள நினைவஞ்சலி மற்றும் பிரர்த்தனை நிகழ்வுகளில் தலையிடாதிருப்பதற்கான பணிப்புகளை முல்லைத்தீவுப் பொலிஸாருக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரி வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நேற்றுக் கடிதம் எழுதியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முள்ளிவாய்க்காலில் ஆயுதப் படையினரால் கொடூரமாக படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களை கூட்டாக நினைவு கூர்ந்து ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 18 ஆம் நாளில் மக்கள் அஞ்சலி செய்வது தாங்கள் நன்றாக அறிந்ததே.

இந்துக்கள் மற்றும் பௌத்தர்கள் என்ற வகையில் வன்முறையால் கொல்லப்பட்ட ஆன்மாக்களின் சாபம் பற்றி நாம் அறிவோம். இந்த நாட்டை இந்த ஆன்மாக்களின் சாபம் சுற்றி அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருவது தெளிவானது. கர்மவினையின் தாக்கங்களே இந்த நாட்டை தாக்குகின்றது என்பதும் தெளிவு.

இந்த ஆன்மாக்களை நினைவு கூர்ந்து பிரார்த்தனை செய்வதால் அவை அமைதி பெறுகின்றன என்பது எமது சமய நம்பிக்கையாகும்.

இறுதியாகப் படுகொலை இடம்பெற்ற முள்ளிவாய்க்காலில் மேற்குறிப்பிட்டவாறு மரணித்த ஆன்மாக்களுக்கு அமைதியான முறையில் 18.05.2022 ஆம் திகதி அஞ்சலி மற்றும் பிரார்த்தனை செய்ய தமிழ் மக்கள் மிகவும் தீர்மானமாக உள்ளனர்.

எனினும், முல்லைத்தீவு பொலிஸார் இதனை தடை செய்வதற்கு ஏற்கனவே நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமை கவலைக்குரியது. இது மிகவும் துரதிஷ்டவசமானதும், எமது அடிப்படை சமய மற்றும் சமூக உரிமைகளை மறுக்கும் செயலாகும்.

ஆகவே இந்த விடயத்தில் தாங்கள் தலையிட்டு, 18.05.2022 ஆம் திகதி புதன்கிழமை முள்ளிவாய்க்காலில் இடம்பெறவுள்ள நினைவஞ்சலி மற்றும் பிரார்த்தனை நிகழ்வுகளில் தலையிடாதிருப்பதற்கான பணிப்புகளை முல்லைத்தீவு பொலிஸாருக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்துதவுமாறு வேண்டுகின்றோம். – என்றுள்ளது.

# பௌத்தர்களையும் கிறிஸ்தவர்களையும் ஒன்றித்துச் செயற்பட திருப்பீடம் அழைப்பு

## வெசாக்கை ஒட்டி திருப்பீட பல்சமய அவை வாழ்த்து

புத்த மதத்தினரும், கிறிஸ்தவர்களும்: நம்பிக்கையை மீண்டும் கொணர்வதில் ஒன்றிணைதல் என்ற தலைப்பில், திருப்பீட பல்சமய அவை, புத்தரின் பிறந்த நாளைக் கொண்டாடும் உலகெங்கும் வாழ்கின்ற அனைத்து புத்த மதத்தினருக்கும் நல்வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளது.

உலகெங்கும் வாழ்கின்ற ஏராளமான புத்த மதத்தினர், கௌதம புத்தரின் பிறப்பு, அவர் ஞானஒளி பெற்றமை, அவரது இறப்பு ஆகியவற்றை நினைவுகூரும் வெசாக்கை இன்று கொண்டாடுகின்றமையை ஒட்டி திருப்பீட பல்சமய அவை, புத்த மதத்தினருக்கு நல்வாழ்த்துச் செய்தியை அனுப்பியுள்ளது.

மனிதகுலம் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்கிறது. மூன்றாவது ஆண்டாக, தொடர்ந்து கொவிட் – 19 பெருந்தொற்று பரவல், சூழலியல் மாற்றத்தால் அடிக்கடி இடம்பெறும் இயற்கைப் பேரிடர்கள், அப்பாவி மக்களின் உயிர்களைக் காவு கொள்ளும் போர்கள் என, மனித சமுதாயம் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுவரும் இவ்வேளையில், வன்முறைக்கு நியாயம் சொல்ல, மதத்தைப் பயன்படுத்தும் கவலையான சூழலும் இன்றும் நிலவுகிறது என அச்செய்தி கூறுகிறது.

மனித சமுதாயம், அறிவியலிலும் சிந்தனையிலும் முன்னேறி வருகிறது என பெருமைப்பட்டுக்கொள்கிறது, ஆனால், அமைதியைக் கொணர்வதில் பின்னோக்கிச் செல்கிறது என்று கவலையோடு உரைத்துள்ள திருத்தந்தையின் சொற்களையும் திருப்பீட பல்சமய அவை, தன் செய்தியில் நினைவுகூர்ந்துள்ளது.

கடுந்துயரங்களுக்கு மத்தியில் ஒருமைப்பாட்டுணர்வு அதிகம் உருவாகியுள்ளது எனவும், சமுதாய அறநெறி வாழ்வில் பின்னடைவு தெரிந்தாலும், அவற்றுக்கு மத்தியில், மதங்கள் நம்பிக்கையின் விளக்குகளாகத் தெரிகின்றன எனவும் அச்செய்தி கூறுகிறது.

செல்வத்தைத் தேடுதல் மற்றும், ஆன்மீக விழுமியங்களைக் கைவிடுதல் ஆகியவற்றால், சமுதாய அறநெறி வாழ்வு குறைந்துவரும் இவ்வேளையில், ஒப்புரவு மற்றும், இன்னல்களிலிருந்து வெளிவருவதற்கு ஏற்படும் மக்களின் ஆர்வத்திற்கு உதவுவதில் புத்த மதத்தினரும், கிறிஸ்தவர்களும் கடமையுணர்வுடன் செயல்படுமாறு அச்செய்தி அழைப்பு விடுக்கிறது.

பிரச்சினைகளுக்கு வன்முறை தீர்வு என நற்செய்தி ஒருபோதும் பரிந்துரைத்தது கிடையாது என்றும், சிறந்ததோர் வருங்காலத்தைக் கட்டியெழுப்ப புத்த மதத்தினரும், கிறிஸ்தவர்களும் ஒன்றித்து செயல்படுமாறும் அச்செய்தி அழைப்புவிடுக்கிறது

திருப்பீட பல்சமய அவையின் தலைவர் கர்தினால் Miguel ðngel Ayuso Guixot அவர்களும், அதன் செயலர் பேரருள்திரு Indunil Janakaratne Kodithuwakku Kankanamalage அவர்களும் கையெழுத்திட்டு இச்செய்தியை வெளியிட்டுள்ளனர்.

கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக, திருப்பீட பல்சமய அவை, தீபாவளி, இரமதான், வெசாக் போன்ற விழாக்களுக்கு, அந்தந்த மதத்தினருக்கு நல்வாழ்த்துச் செய்திகளை வெளியிட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# முள்ளிவாய்க்கால் நினைவு மூன்றாம் நாள் நவாலியில்!



(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,மே.15

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தின் மூன்றாம் நாள் நினைவேந்தல் தமிழ் தேசிய மக்கள் முன்னணியால் நவாலியில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

நவாலி சென் பீட்டர்ஸ் தேவாலயத்திற்கு அருகில் உள்ள நினைவுத்தூபியில் நேற்று காலை 9.30 மணியளவில் நினை வேந்தல் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது நவாலி புனித பீட்டர்ஸ் தேவாலயத்தில் இலங்கை விமானப் படையினரின் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கும் முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களுக்கும் சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் உட்பட கட்சியின் உறுப்பினர்கள் இதில் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணம் - நவாலி புனித பீட்டர்ஸ் தேவாலயத்தில் 1995 ஆடி மாதம் 9ம் திகதி அரச விமான தாக்குதலில் 147 பொதுமக்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### ரணிலுக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நாடாளுமன்றத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பக்கபலமாக இருப்பதற்கும், அவருக்கான பெரும்பான்மையை உறுதிப்படுத்துவதற்கும் பொதுஜன பெரமுன கட்சி இணக்கம் வெளியிட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்றக்குழுவினரை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று சந்தித்து பேச்சு நடத்தினார்.

ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இச்சந்திப்பில் சுமார் 91 எம்.பிக்கள் பங்கேற்றுள்ளனர்.

தமது வீடுகள் தாக்கப்பட்டமை தொடர்பில் முறையான விசாரணை முன்னெடுக்கப்பட்டு, குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் எனவும், இழப்பீடு வழங்குவதற்கான பொறிமுறை விரைவில் உருவாக்கப்பட வேண்டும் எனவும் ஆளுங் கட்சி உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதற்காக விசேட சட்டம் இயற்ற வேண்டியதில்லை, தற்போதுள்ள சட்டத்தின் பிரகாரமே தேவையான நடவடிக்கையை எடுக்க முடியும் என அலிசப்ரி குறிப்பிட்டுள்ளார்.

சபை முதல்வராக தினேஷ் குணவர்தனவையும், ஆளுங்கட்சி கொறடாவாக பிரசன்ன ரணதுங்கவையும் நியமிப்பதற்கு முடிவெடுக்கப்பட்டது. பிரதி சபாநாயகர் பதவிக்கு அஜித் ராஜபக்ஷவை பெயரிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேபோல புதிய பிரதமருக்கும், அவரின்கீழ் ஜனாதிபதி முன்னெடுக்க உள்ள வேலைத்திட்டங்களுக்கு ஆதரவு வழங்கப்படும் என மொட்டு கட்சி உறுப்பினர்கள் உறுதியளித்துள்ளனர்.

### நீதியரசர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தமிழ்த் தேசியக் கூட்டணியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார் என சில செய்திஊடகங்கள் தகவல் வெளியிட்டன.

இந்தப் பின்புலத்தில் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் ரணில் விக்கிரமசிங்கவின் புதிய அரசில் அமைச்சராகப் பதவியேற்கலாம் என நேற்றிரவு பரபரப்பாகப் பேச்சடிபட்டது.

### எம்.பிக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

உறுப்பினர்களது இல்லங்களிற்கு அண்மையில் இராணுவத்தினர் இறக்கப்பட்டுள்ளமையைக் காணக்கூடியதாகவுள்ளது.

# நியூசிலாந்தும் இலங்கைக்கு நிதியுதவி



பொருளாதார நெருக் கடிகளை எதிர் நோக்கும் இலங்கை விவசாயிகளுக்கு உதவுவதற்கும், பாதிப்புக்குள்ளாகும் சிறுவர்களுக்கு உணவு வழங்குவதற்கும் என 5 இலட்சம் நியூஸிலாந்து டொலர்களை வழங்குவதாக நியூசிலாந்து வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

உலக உணவுத் திட்டம் மற்றும் ஐக்கிய நாடுக ளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு ஆகியவற் றின் ஊடாக இலங்கைக்கு இந்த நிதியுதவி வழங்கப்படும் என்று நியூசிலாந்தின் வெளிவிவகார அமைச்சர் நனையா மஹூடா டுவிட் டர் செய்தி ஊடாகத் தெரிவித்துள்ளார்.

இது இலங்கைக்கும் நியூசிலாந் துக்கும் இடையிலான 30 வருட கால ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் என்றும், இந்த 30 வருட காலத்துக்குள் நியூசிலாந்து இலங்கைக்கு 25.07 மில்லியன் நியூஸிலாந்து டொலர்களை அபிவிருத்தித் திட்டங்களுக்காக உத வியாக வழங்கியது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.